REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 21 | சுன்னாகம், கர ஆனி கஂ 24-6-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 46

JAFFNA COLLEGE LIBRARY 29 JUN 1951 VADDUKODDAI, CEYLON.

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# அதிகார மமதை

## பொதுமக்கள் என்ன துரும்பா

## மதுபானத்தை ஆதரித்துநிற்கும் அற்புதம்

நமது அரசியல் நிருபர்

அரசாங்கக் காரியாலயங்களுக்கு அலுவலாகச் செல்லும் பொதுமக்களை அரசாங்க ஊழியர்கள் ஏற்ற முறையில் நடத்துவதில்லை என்பது நீடித்த குறைபாடாகும். உத்தியோகத்தை அரசினரின் கீழ் பெற்ருேர், தம்மைத் தாமே பிழையாக மதிக்க ஆரம்பித்து விடுகின்றனர். தாம் பெற்ற பதவி அதிகாரம் என்பவற்றை நோக்கி இறுமாப்பும் தலைப் பாரமும் அடைவது சாதாரண விஷயமாய் விட்டது. பொதுமக்கள் இவர்களிடம் ஏதும் முக்கிய அலுவலாகச் சென்ருல் அவர்களைத் துரும்பென மதிக்கத் துணிகின்றனர். உத்தியோகத்தர்கள் தாம் பொதுமக்கட்கு ஊழியஞ் செய்ய ஏற்பட்டவர்கள் என்பதை முற்ருக மறந்து போவது மிகப் பிழையான காரியம். கல்வியறிவும் நாகரிகமும் கைவரப் பெருத சாதாரண மக்கள் பழக்க வழக்கம், பேச்சுவார்த்தை என்பனவற்றில் உச்சநிலையை அடையாதவராகவே இருப்பார்கள். அவர்களிடம் இரக்கமும் அன்புங் காட்டி அவர்கள் குறைகளை அறிந்து உதவிபுரிவதற்குப் பதிலாக அவர்களுடன் ஏறுமாருக நடந்துகொள்வது முறையாகாது. பிரிட்டிஷ் அரசினரின் ஆட்சி நிலைபெற்றபோது உத்தியோகத்தர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் சிருட்டிகளாக இருந்திருக்கலாம். ஆனுற் சுதந்திரம் பெற்ற இலங்கையில் அதேபோன்று இன்றுங் கருதுவது முறையாகாது. சுதந்திரம் பெற்ற நம் நாட்டில் யாவரும் சமவுரிமையும், சம அதிகாரமும் உடையர். அடிமை முதலாளி என்ற பேச்சுக்கே இனி இடமில்லை. பகிரங்க உத்தியோகத்தர் பொதுமக்களின் ஊழியர் என்பதை மறக்கக் கூடாது. பொதுமக்களை அன்பாகவும் ஆதரவாகவும் நடத்தி அவர்கள் குறை நிறைகளை விசாரித்து ஏற்ற உதவிபுரிவதே அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் கடமையாகவேண்டும். எனவே உத்தியோகம் வகிக்கும் ஊழியர்கள் தமது நிலையைச் சீராயுணர்ந்து இக்குறைகளை நீக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

### இதற்கும் எதிர்ப்பா

உலகில் பொதுவாக எல்லா விஷயங்கட்கும் எதிர்ப்பு இருப்பது சர்வ சாதாரணம். ஆனுல், பஞ்சமகாபாதகங்களைத் தடுக்க ஏற்படும் இயக்கங்களை எதிர்ப்பவர் உலகில் இருப்பதுதான் அற்புதமாகும். இப்பாதகங்கட்கு ஆளாவோர் அந்தரங்கத்தில் வசிப்பர். அரங்கத்தில்வந்து தாம் மேற்கொள்ளும் பாவங்களை அவசியமென்று நிலைநாட்ட முற்படார். ஆனுல் இலங்கையில் இதற்கு நேர்மாருகச் சம்பவங்கள் நிகழ்கின்றன. மது நீக்கத்தை நாடி ஒரு சங்கத்தினர் மிக அக்கறையாக உழைத்து வருகின்றனர். சில நாட்களுக்குமுன் நீர்கொழும்பில் மதுநீக்கத்தைக் கண்டிக்க ஒரு பெரிய மகா சபை கூடிற்று. இச்சபைக்கு ஆதரவு இருப்பதாகவே எண்ணவேண்டியிருக்கின்றது. பகிரங்கமாக, இப்படி ஒரு சபை

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)



ஜோன் போஸ்டர் டல்ஸ் அவர்கள் ஜனுதிபதி ட்ருமனின் விசேஷ தூதராவார். யப்பானிய சமாதான உடன்படிக்கைக்கு பிரிட்டிஷ் மந்திரி சபை சம்மதிப்பதாக இவரிடம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தேர்தல் வதந்தி

## மந்திரி விலகுகிருர் என்றகதை

## ஆனையிறவுத் தொழிற்சாலையின் இரகசியம்

நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம், 22-6-51

சுதந்திர இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலைப்பற்றிய பேச்சு நாடு முழுவதிலும் இன்று அடிபடுகின்றது. புதிய கட்சிகள் தோன்றுவதுடன் பழைய கட்சிகளும் தங்களுக்குப் பலக் தேடுவதில் முனைந்துநிற்கின்றன.

யாழ்ப்பாணப் பகுதியைப் பொறுத்தவரையில் இப்போது ஒன்றுந் திட்டவட்டமாகக் கூறவியலாது. யாழ்ப்பாணத் தொகுதியைமட்டுந் தனியாகஎடுத்துக்கொண்டால் ஒரு சில குறிப்புக்களை இங்கு எழுதமுடியும். இவை எவ்வளவு தூரம் உண்மையென்று இப்போது சொல்வதற்கில்லை.

இன்று யாழ்ப்பாணத் தொகுதிக்கு மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் அங்கத்தவராகப் பிரதிநிதிகள் சபையிற் பதவிவகித்துவருகின்ருர். சென்ற பொதுத் தேர்தலில் இவர் சேர் மகாதேவா அவர்களை (அப்போது திரு. மகாதேவா) எதிர்த்து வெற்றி கண்டார்.

புதிய பொதுத்தேர்தலில் இவருக்கு யாழ்ப்பாணத் தொகுதியிற் போட்டியிருக்குமென்றே அறிகின்றேன். மேயர் ஸி. பொன்னம்பலம் அவர்கள் அபேட்சகராக முன்வரக்கூடுமென யாழ்ப்பாணமெங்கும் ஒரே பேச்சாக இருக்கின்றது. ஸ்ரீ வைகுந்தவாசன் என்பவரின் பெயரும் இதுசம்பந்தமாக அடிபடுகின்றது. இவர் சமீபகாலத்தில் அரசாங்க உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டவர். அரசாங்கச் சட்டமொன்றைமீறிய காரணத்துக்காக இவருக்கு இக்கதி ஏற்பட்டது. இன்று இவர் கொழும்பிலிருந்து வெளியாகும் 'பீப்பிள்ஸ் வோய்ஸ்' என்ற ஆங்கிலவார வெளியீட்டின் ஆசிரியராகவிருக்கின்ருர். அரசாங்க ஊழியர்களின் ஆதரவைத் தாராளமாகப் பெற்று இவர் யாழ்ப்பாணத் தொகுதியிற் போட்டியிடக்கூடுமெனக் கருதப்படுகின்றது.

செனேட்டர் டொக்டர் நாகநாதன் அவர்களும் தமது முன்னுள் அரசியற் குருவாக விளங்கிய ஸ்ரீ ஜி. ஜி. அவர்களுடன் போட்டியிட ஆசைப்படுகின்ருர் எனப் பல மாதங்களுக்கு முன்னர் ஒரு செய்தி கிளம்பியது. இவர் தமிழரசுக் கட்சியின் சார்பிலே தான் போட்டியிடவேண்டி நேரிடும்.

இந்நிலையில் மற்றுமோர் செய்தி எட்டியிருக்கின்றது. மந்திரி பொன்னம்பலம் அவர்கள் மிகுந்த புத்திசாலியானபடியால் ஒருவேளை பருத்தித்துறைத் தொகுதிக்கு அபேட்சகராக முன்வரக்கூடுமென்பதே அச்செய்தியாகும். அப்படியானுல் அவருக்கு அங்கு எதிர்ப்பு இருக்கமாட்டாதென அறியக்கிடக்கின்றது.

### மந்திரி சபை

மந்திரி பொன்னம்பலம் அவர்கள் மந்திரிசபையினின்றும் விலகப்போகின்ருர்என்ற ஒரு வதந்தி நிலவியது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். ஆனையிறவிலே நிறுவப்பட்டிருக்கும் காரச்சோடாத் தொழிற்சாலை சம்பந்த

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# ஆசிய ஒற்றுமை

எஸ். கே. கந்தையா

ஆசிய நாடுகள் மகாநாடு சில காலத்துக்கு முன்னர் நடைபெற்றது. புத்துயிர் பெற்று வரும் ஆசிய தேசங்களின் கலாசார, பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் ஒற்றுமைக்காகக் கூட்டப்பட்ட இம் மகாநாடு அதிகாரபூர்வமானதல்ல. இது பொது ஜனஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடாக நடைபெற்றது. இதிலிருந்து கவனிக்கக் கூடிய பலன் கிடைத்ததாகவில்லை. ஒற்றுமை முயற்சிகள் பொதுஜன அபிப்பிராயத்தைக் கவரவில்லை.

ஆனுல் இன்றைய உலக நிலையில் ஆசிய ஒற்றுமை ஆசிய வளர்ச்சிக்கு மாத்திரமல்ல, ஆசியா இயங்குவதற்கும் அத்தியாவசியமாகிறது. முதலாவது உலக யுத்தம் பெல்ஜியத்தையும் பிரான்சையும் அழித்து அத்தேசங்களின் பெலனைக் குறைத்தது. இரண்டாவது உலகயுத்தம் போலந்து காரணமாகத் தொடங்கி உலகயுத்தமாகியது. மூன்ருவது உலகயுத்தம் கோறியாவிலிருந்தா, தென் கிழக்கு ஆசியாவிலிருந்தா, தென் மேற்கு ஆசியாவிலிருந்தா, கிளம்பவிருக்கின்ற தென்ற பயம் மக்களை வாட்டுகின்றது. இந் நிலையில் இரண்டு மூன்று சம்பவங்களும் அவற்றின் தாற்பரியங்களும் கவனிக்கப்பட வேண்டியன.

சில நாட்களுக்கு முன் இந்திய அரசாங்கத்தின் சோவியத் ஸ்தானிகர், சேர் இராதாகிருஷ்ணன், மகாத்மா காந்தியின் ஞாபகார்த்தமாக இருப்பவைகளை சோவியத் அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் டால்ஸ்டாய் நூதனசாலைப் பாதுகாப்பாளரிடம் ஒப்படைத்தார். மகாத்மாகாந்திக்கும் டால்ஸ்டாய்க்குமிடையே அபிப்பிராய ஒற்றுமை இருந்ததென்றும், இருவரும் யுத்தத்தை வெறுத்தார்கள் என்றும் சேர். இராதாகிருஷ்ணன் கூறினர். யுத்தவெறி அதிகரிக்கும் இக்காலத்தில் இந்திய அரசாங்கம் இவ்வாறு நடந்துகொண்டமை கவனிக்கப்பட வேண்டும்.

சேர் இராதாகிருஷ்ணன் முன்பு இந்தோ—சோவியத்து நண்பர்கள் சங்கத்தின் தலைவராக இருந்து, நேரு அவர்களால் சோவியத்து ஸ்தானிகராக அனுப்பப்பட்டார். இந்திய தத்துவ விற்பன்னராகிய இவர் மகாத்மாகாந்திக்கும் டால்ஸ்டாய்க்குமிடையே உள்ள கலாசார, சமாதானப் பிரேமையைச் சோவியத்து அரசாங்க ஸ்தாபனமாகிய டால்ஸ்டாய் நூதனசாலையில் நிரூபித்தமை ஆசிய நாடுகளுக்கிடையே ஏற்படவேண்டிய கலாசார ஒற்றுமையின் அவசியத்தைவற்புறுத்துகின்றது.

இரண்டாவதாக, இந்திய சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கி நடத்திய அருணு ஆசாப் அலி அவர்கள் சோவியத் நாடு சென்று மீண்டபின், இந்திய எழுத்தாளரில் பிரமுகரான முல்க் ராஜ் ஆனந்தருடன் இந்திய-சீன நண்பர்கள் மகாநாடு ஒன்றை ஸ்தாபித்தார். இம் மகாநாட்டுக்குச் சீனச் சுதந்திர கர்த்தா [illegible] வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். ஆகவே ஆசியாவின் மூன்று பிரதான தேசங்களின் பிரபல பிரமுகர்களுக்கிடையிலும், அரசாங்கங்களுக்கிடையிலும் சமாதானப் பிரேமை உண்டென்பதை அறிய முடிகின்றது. பிரபல இந்திய காங்கிரஸ் தலைவர் டாக்டர் கிற்சிலு பிரபல இந்திய தேசிக நடிகரான பிருதுவி சிங் ஆகியோரும் இந்திய சமாதான மகாநாட்டை ஸ்தாபித்து இந்தியாவின் சமாதானப் பிரேமையை வற்புறுத்தியிருக்கிருர்கள்.

அணுக்குண்டுயுத்தம் ஆசியாவில் ஏற்படுமென்ற அபாயமிருக்கும்போது ஆசிய நாடுகளுக்கு யுத்தத்தால் வரும் கேட்டை அளவிடமுடியாது. ஓர் உலகயுத்தம் தொடங்கி அதில் அமெரிக்கா வெற்றி பெற்ருலுங்கூட, அமெரிக்கா நட்டப்படுமென ட்ருமன் கூறியிருக்கும்போது ஆசியாவின் அபாயத்தை என்னென்பது? தென்மேற்கு ஆசியா தென் கிழக்கு ஆசியாவின் அபாயங்கள் பரம்பி ஆசிய நகரங்களில் அணுக்குண்டை வீழ்த்தாமலிருக்க ஆசிய தேசங்களிடையே சமாதானப் பேச்சுக்கள் நடந்து யுத்த எதிர்ப்பு ஒற்றுமை ஏற்படவேண்டும். மகாத்மா காந்தியின், டால்ஸ்டாயின், நேருவின், இராதாகிருஷ்ணனின், அருணு ஆசாப் அலியின், முல்க்ராஜ் ஆனந்தரின், சன்யாற்சென் அம்மையாரின், டாக்டர் கிற்சிலுவின், பிருதுவி சிங்கின் ஆசியஒற்றுமைப் பிரேமை, சமாதானப் பிரேமை ஆகிய மக்களிடையே பரம்புவது அவசியம் சமாதானம் வாழ்க!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

### கொண்டோடி

- ஆற அமர யோசித்துப் பேசவேண்டுமாம்.
- யோசியாமற் பேசுபவர்களும் இருக்கின்றனராம்.
- இலங்கை மந்திரிமார் யோசியாமற் பேசுவார்களாம்.
- மந்திரி குணசிங்கா இதில் மகா நிபுணராம்.
- இவர் பொறுப்பற்ற வார்த்தைகளைப் பேசுவாராம்.
- உத்தியோகப் பொறுப்பற்ற மந்திரியாக இவர் பதவி வகித்தாராம்.
- ஆனபடியாற்றான் பொறுப்பின்றிப் பேசுகின்றாராம்.
- பொறுப்பற்ற பேச்சுகளைக் கவனித்துச் சூடுபோடுபவர்களும் இருக்கின்றனராம்.
- இந்தியப் பத்திரிகைகள் மந்திரி குணசிங்காவுக்கு நல்ல சூடு கொடுத்திருக்கின்றனவாம்.
- இலங்கை அரசாங்கம் இலங்கையரல்லாதவர்களை வேலையினின்றும் நீக்குமென மந்திரி பிதற்றினாராம்.
- இது இறுமாப்பான ஒரு வழியாம்.
- இதனால் இந்திய இலங்கை உறவு அபிவிருத்தியுறுதாம.
- இலங்கை மந்திரி சபையிலும் அபிவிருத்தி இல்லையாம்.
- இலங்கை மந்திரிமார் முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவார்களாம்.
- அரசாங்க மந்திரி ஒரு கருத்தை வெளியிடுவாராம்.
- மறுநாள் பிரதம மந்திரி அதை மறுப்பாராம்.
- இப்படி 'மறுத்தான' போடுவது மந்திரிமாருக்குத் தண்ணீர்ப்பாடமாம்.
- மந்திரிமாரின் தயவிற் பதவி வகிப்பவர்களும் இருக்கின்றனராம்.
- பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இந்தப் பவிசுக் கேடு உண்டாம்.
- கொழும்புப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் வள்ளுவரைக் கிள்ளுக் கீரையாக்குகின்றாராம்.
- கிள்ளிவிட்டுக் கூத்துப் பார்ப்பதிற் குட்டைப் பேர்வழிகள் சமர்த்தராம்.
- இக் குட்டைப்பிரகிருதிகள் தாங்களும் குறுமுனிகளாம்,
- அகத்தியனிலும பார்க்க இவர்கள் சகதத்திற் பெரிய புலவர்களாம்.
- அங்கும் பொறுக்கி இங்கும் பொறுக்கிக் கவிதைபுனைய இவர்களுக்கு வருமாம.
- புனை பெயரிற் குட்டைப் பேர்வழிகள் கும்மாளம் போடுவார்களாம்,
- சிங்களப்பேப்பர் முதலாளிக்கு அந்தக் குட்டையில் நடக்கும் கும்மாளம் ஒரே கிரந்தநாளும்.
- ஏரிக்கரை வாலாக்கள் போலித்தமிழ்ப்பண்டிதர்களாம.
- இவர்களைக் குட்டவேண்டுமாம.
- இக் குறும்பர்களை வெட்ட வேண்டுமாம்.
- அத்துடன் குறும்பியளவினதாய்க் குடையவும் வேண்டுமாம.
- இத்தனையும் நடந்தாற்றான் ஒரு சில தமிழர்களைப் பிடித்துள்ள பிணி தீருமாம்.

## அகில இலங்கை இந்துக்கள் மகாநாடு

### இந்து ஆலய சீர்திருத்த அறிக்கை ஆராய்வு

**அகில இலங்கைக் காந்திய சேவா சங்கக் காரிய நிர்வாகசபைக் கூட்டமொன்று சென்ற 13-6-51-ல் கொக்குவில் சேவாநிலையத்தில் நடைபெற்றது.** உபதலைவர் **பண்டிதர் அ.** ஆறுமுகம் அவர்கள் தலைமை வகித்தார்கள். இந்து ஆலய விசாரணைச் சபையின் அறிக்கை பற்றி நாட்டிற் சாதக பாதகமான அபிப்பிராயம் நிலவுவது பற்றி நிர்வாக சபை ஆலோசித்தது. அதன் பின்னர் இலங்கையிலுள்ள எல்லா இந்து சபைகளின பிரதிநிதிகளையும் தனிப்பட்ட இந்துப் பிரமுகர்களையும் அழைத்து ஜூலை மாதத்தில் ஒரு அகில இலங்கை இந்துக்கள் மகாநாட்டைக் கூட்டி இந்து ஆலய அறிக்கை பற்றி ஒரு தெளிவான அபிப்பிராயத்தை வெளிபிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. இந்து ஆலயங்களின் சீர்திருத்தத்தையும் முன்னேற்றத்தையும விரும்பும் எல்லா ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் இந்த நோக்கத்துக்கு ஆதரவளிக்குமாறு கோரும் விஞ்ஞாபனம் அடுத்தவாரத்தில் அனுப்பி வைக்கப்படுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 6453.**

ஊரெழு
**விசுவநாதர் வீரவாகு,** வழக்காளி
ஊரெழு
1. **வீரகத்தி செல்லயா**
2. **பெண் அன்னம்மா**

திண்ணைவேலி கிழக்கு
3. **கனகசபை வேலாயுதபிள்ளை** எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6453-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு ஆண்டுக்காணியை, 1951-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 18-ந் திகதி (8-7-51) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும.

**தீர்வைத் தொகை:**—முதல வட்டி ரூபாய் 727-00 ம், இதில் ரூபாய் 600 க்கு 20-3-50 திகதி தொடக்கம 7-11-50 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 150-35 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று. ஊரெழு இறை "இந்திராளை" நிலப்பரப்பு 44½ ஆனல் ஆட்சிப்படி நிலப்பரப்பு 45-ம குளி 12-ம் வீங்களும், செய்பயிர்களும், கிணறும், வழிவாய்க்கால் உரித்தும், இதில் தெற்குப்பக்கமாக நித்தமாய் நிலப்பரப்பு எழு(7-ம்) குளி 15-ம். எல்லை: கிழக்கு ஒழுங்கை. வடக்கு இராமுப்பிள்ளை பெண் தங்கமணியின் ஆதனம். மேற்கு இராமுப்பிள்ளை பெண் தங்கம்மாவின ஆதனம். தெற்கு அப்பாக்குட்டி வயித்திலிங்கத்துக்கும் பெண் ஆச்சிமுத்துவுக்கும், மறபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும். மூற்பதிவு K $\frac{154}{144}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 5-6-51 [4334]


சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORFORTED IN
GRET BRITIN
LIBILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.
[4315]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✯ இந்த நாடு தமிழர் வாழும் ஈழத்துக் கீழ்நாடு ஆகும்.
❋ இந்தக் கீழ்க்கரை நாட்டில் செந்தமிழ் புரக்கப்படுவதோடு சமயமும் போற்றப்படுகிறது.

# கீழ்க்கரைக் கோயில்கள்

## தமிழும் சைவமும் கமழும் நாடு

**வளமை :**

ஈழ நாட்டில் கீழ்க்கரை மிகவும் வளமை பெற்ற பகுதியாகும். கரையோரம் முற்றும் தென்னை, பலா, மா முதலிய பலன் தரும் மரங்கள் மிகுதியும் உண்டு. அச் சோலைகளின் இடையே ஏரிகளும் கழிகளும் அமைந்திருக்கின்றன. அவைகளை யொட்டி நன் செய் வயல்களும் மிக உண்டு. ஆகவே இந்தக் கரையோரமாக மக்கட் பெருக்கத்துக்குக் குறைவு இருக்குமா? எங்கு பார்த்தாலும் மக்கள் வாழும் ஊர்கள் காணப்படுகின்றன. இவ்வூர்களில் தமிழும் சைவமும் மணக்கின்றன. அறிவு கமழ்கின்ற கல்விச்சாலைகளும் இருக்கின்றன. ஆசிரியர்கள் இளைஞர்களைத் தமிழிலும் சமயப் படிப்பிலும் ஆர்வம் கொள்ளச் செய்கிறார்கள். அவர்களுடைய நாட்டுப்பற்றை வியந்து போற்றவேண்டும். ஒரு கூட்டத்தில் ஒரு தமிழ் ஆசிரியர் தன் ஆர்வத்தை அடியிற் கண்ட கருத்துக்களால் பாராட்டி எடுத்துரைத்தார். "எங்கள் நாடு மிகப் புகழும் வளமையும் பெற்றது. அதனைப் பிறர் அறிவதில்லை. அதனால் எங்களைப் புறக்கணிக்கிறார்கள். அவர்கள் எங்கள் நாட்டின் வளத்தையும் பண்பாட்டையும் அறிய வேண்டும். எங்கள் நாட்டில் நால்வகை நிலங்களும் உண்டு. கடற்கரையோரத்தில் அதோ நெய்தலைக் காண்கிறீர்கள். மருத நிலத்தை இதோ நன்செய் வயல்களில் காணுகிறீர்கள். எங்கள் மேட்டு நிலங்களில் முல்லையைப் பார்க்கிறீர்கள். எதிரே தொலைவில் தோன்றும் குன்றுகளில் குறிஞ்சியைக் காண்கிறீர்கள். நால்வகை நிலங்களும் இங்கே ஒருமித்து இருக்கச் செந்தமிழ் மணக்காமல் இருக்குமா? அதனோடு எங்கள் கழியில் நீந்தும் மீன்களும் பாடும் என்றால் இயலோடு இசையும் இங்கு உள்ளது என்று கூற வேண்டாமா? இது மட்டுமா, பண்டைய நாடகக்கலை எங்கள் பகுதியிலேதான் உண்டு. அதனை இன்றைக்கும் நாங்கள் போற்றி வருகின்றோம்" என்று அந்தக் கீழ்க்கரை நாட்டின் அரிய வளத்தைப் பற்றிப் பேசினார். அதனை ஒட்டிப் பேசும் பெருமையும் எனக்கு வாய்த்தது. இந்த நாடு தமிழர் வாழும் ஈழத்துக் கீழ்நாடு ஆகும்.

**சமய நிலையங்கள் :**

இந்தக் கீழ்க்கரை நாட்டில் செந்தமிழ் புரக்கப்படுவதோடு சமயமும் போற்றப்படுகிறது. சமய நிலையங்கள் நிரம்ப இருக்கின்றன. அவற்றில் நடுநாயகமாகப் போற்றப்படுவது **கொக்குடிக்கோயில்** என்பது. இது மட்டக்களப்பிலிருந்து கரைதீவிற்குச் செல்லும் பாதையில் ஓரிடத்திலிருந்து பிரிந்து மேற்கே கிளைச்சாலையில் சென்றால் கழியைப் படகால் கடந்து எதிர்ப்புறம் சிறிது தொலைவு சென்றவுடன் காணப்படுகிற ஓர் அருமையான புகழ்பெற்ற கோயில் ஆகும். இக்கோயில் மிகத் தொன்மை வாய்ந்தது. அதன் ஐதிகமும் மன எழுச்சியைத் தரத்தக்கது. பண்டைக்காலத்தில் இக்கோயில் அமைந்த பகுதி அடர்ந்த வனமாக இருந்தது. அவ் வனத்தில் ஒரு வேடன் விறகு வெட்டச் சென்றான். அங்கே ஓர் அழகிய கொக்குடிமரம் இருந்தது.

○ கோ. கி. ○

(அது ஆலமரத்து இனத்தைச் சேர்ந்ததாம்.) அதனை அவ் வேடன் வெட்டினான். வெட்டின பிளவிலிருந்து குருதி பொழிந்ததாம். அதனைக் கண்ட வேடன் மயங்கி வீழ்ந்தானாம். பிறகு மயக்கம் தெளிந்து தன் ஊருக்குச் சென்று நடந்த அநுபவத்தைச் சொன்னானாம். ஊரார் வந்து பார்த்து அது ஒரு தெய்வத் தோற்றம் என்று உணர்ந்து அங்கே கோயில் எழுப்பி அதையே மூலத்தானமாக அமைத்து வணங்கி வருகிறார்களாம். இந்தப் பெருமை வாய்ந்தது இந்தக் கொக்குடி அண்ணலார் கோயில். இவ் வரலாற்றைக் கேட்டதும் என் வியப்பிற்களவில்லை. தென் தமிழ் நாட்டில் பாடல்பெற்ற கோயில்களில் **கொகுடிக் கோயில்** என்பதொன்று உண்டு. கொகுடி என்றால் ஒரு முல்லைக்கொடி என்று எண்ணினதுண்டு. இங்கே பாராட்டி வரும் ஐதிகத்தைக்கொண்டு கொகுடி என்பது ஒரு மரம் என்றுகொள்ள இடம் இருக்கிறது அல்லவா? இந்த ஆலயம் அக்கம் பக்கத்து மக்கள் மிகுதியாகப் போற்றி வருபவைகளில் சிறந்தது என்று எண்ணவேண்டும்.

**வடபால் நிலையம் :**

கீழ்க்கரையில் போற்றப்படும் ஆலயங்களில் வடக்கே உள்ளது **சிற்றாண்டிக்குடி கந்தப்பெருமான் கோயில்.** இக்கோயில யாழ்ப்பாணத்துக் கோயில்களைப் போல் கட்டப்பட்டது. பிராகாரம் ஓடுகளால் வேயப்பட்டது. ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு அழகிய உருவம் தீட்டப்பெற்றுள்ளது. அறுபத்து மூவர் வரலாறுகளும் அத் தூண்களில் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. ஆலயத்தைச் சுற்றிலும் நிழல் தரத்தக்க தென்னம் பொழில் அடர்ந்த ஊர் உண்டு. இவ் ஆரை

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

# புதுமைப்பித்தன்

டி. வி. சுவாமிநாதன்

கற்பனையால் வாழ்க்கையிலே
காணுகின்ற நடப்புகளைப்
பற்பலவாம் கோணத்திற்
படமெடுத்து வன்மைமிகும்
சொற்களினால் உயிரூட்டும்
"சொ. வி."யைக் காணேமே!
விற்பன்னர் வேறாரார்
விருத்தாசல மவர்எங்கே?

கைத்தபழங் காதல்அது
கைம்பெண்ஓர் ஒப்பாரி
வைத்தழுத வைபோகம்
வளர்வுற் றிலக்கியமாய்ப்
புத்தகத்திற் புல்லரித்த
புராதீன தசையினிலே
உத்தியிலே புரட்சிமுறை
உள்ளமஸ்தி வாரக்கல்.

புதுமரபின் தீக்குளித்துப்
புடமெடுத்த பைம்பொன்னாய்
இதுவரையில் தமிழ்வளர்த்தான்;
இயமனெடுத்துச் சென்றனனோ?
மதுரையில்முன் புலவர்களை
மதித்தனராம்! பொய்க்காலோர்
குதிரையின்மேல் ஏறுவதாய்க்
குன்றியதின்(று) அவர்நிலைமை.

செத்தவண்ணம் வாழ்ந்திருந்தான்;
செல்லரித்த கொள்கைகளைக்
குத்திவெளிக் குடைந்திழுத்துக்
கோளாறைக் கண்டுரைத்துச்
செத்துவிடச் செய்வதற்காய்ச்
செண்டாடும் வஞ்சியரைப்
பத்திக்கதை எழுதாமற்
பரத்தையரின் மனப்பின்னல்.

வைத்தும்தமிழ் வளர்த்திட்டான்;
வையத்து வீதியில்முள்
தைத்துள்ளம் குமைந்ததடா,
தன்னிகரில் லாமேதை!
வித்தகன்தன் போக்கினிலே
விதிவழியே ஏகிவிட்டான்;
கத்துவதா? மௌனத்திற்
கண்ணீர் வடிப்பதுவா?

மறுமலர்ச்சி தழைக்கவந்த
மன்னவனை - ஏன், தாயே!
சிறுவயதில் அழைத்திட்டாய்?
சிதையேற்றிப் பொசுக்கிட்டோம்!
நறுமலரின் சோலையிலே
நட்டவனின் பெயர்நினைவை
இருதயத்திற் பசுமையுடன்
இருத்துவதே ஆறுதலா?

ஐரோப்பா யாத்திரை

✯ எமது தமிழ்ப் புலவர்களது இல்லங்களும் அவர்கள் உபயோகித்த தளபாடங்களும் இன்று எங்கே?

# ஆங்கிலப் புலவர் இல்லம்

## சமாதிகள் நிறைந்த கோயில்

[சென்ற வாரத் தொடர்ச்சி]

அன்று இரவு 'படி' யினது வீட்டுக் கருகாமையிலேயே உள்ள ஒரு விடுதி வீட்டிற் தங்கினோம். காதை அடைக்கும் குளிரானபடியால் நித்திரைகொள்வது கடினமாகஇருந்தது. படுக்கையின்மேல் இரண்டு கம்பளிகளை விரித்து அதன்மேல் படுத்துக்கொண்டு உஷ்ணம் பெறுவதற்காக எனக்கு அவர்கள் தந்த வெந்நீர்ப் போத்தல்களின் உதவியுடன் ஒருவாறு நித்திரையானேன். மறுநாட்காலை 'படி' வந்து சிற்றுண்டி அருந்தச் செய்த பின் சில இடங்களைக் காண்பித்தார். நாம் வெல்வாஸ்ற்றிற்குத் திரும்பவேண்டுமென்று கூறினோம். எமது யாழ்ப்பாணத்து உறவினர் கூறுவதுபோல படிகலகர், "ஏன் என்ன அவசரம்; இன்னும் இரண்டு நாட்கள் எம்முடன் தங்கியிருந்து போனால் என்ன? இங்கிலாந்தில் ஒருமாசம் தங்கின நீங்கள் எங்கள் ஊரிலும் சிலகாலம் இருந்தாலென்ன?" என்று கூறினார். அன்புநிறைந்த படிகலகரிடமும் அவரது சுற்றத்தாரிடமும் ஒருவாறு விடைபெற்றுக்கொண்டு வெல்வாஸ்ற்றிற்குத் திரும்பினோம். 4-11-50 மாலை "[illegible] இளவரசன்" என்று பெயரிடப்பட்ட கப்பலில் ஏறி அடுத்த நாட்காலை இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் என்ற பட்டினம் சேர்ந்தேன். அயர்லாந்து வறிய நாடாக இருக்கலாம். ஆனால் அங்குள்ளவர்கள் தேசபக்தியும் விருந்தோம்பலும் நிறைய உள்ளவர்கள் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

வழக்கறிஞர்
— அ. அருளம்பலம் —

**லிவர்ப்பூல் நகரம்**

லிவர்ப்பூலில் இருந்து 5-11-50 மத்தியானம் பேர்மிங்காம் என்ற பட்டினத்திற்கு வந்தேன். இங்கே இரும்பினாலாய புகைவண்டி இயக்கும் இயந்திரம் முதற்கொண்டு குண்டூசிவரை சிறிய சகல பொருள்களையும் அதற்கேற்ற ஆலைகளிற் செய்து முடிக்கின்றார்கள். இந்த ஆலைகளில் ஒருபகுதியை நான் பார்க்கத்தக்கதாக இருந்தது. இங்கிருந்து 6-11-50 காலை கிளாஸ்கோவிலுள்ள கூட்டுறவு விளைபொருட் சங்கத்திற்குச் சென்றேன். எமது நாட்டிலுள்ள விளைபொருட் சங்கங்கள் எப்படி வெண்காயத்தை புகையிலையையும் விருத்தி பண்ணுவதில் உதவுகின்றனவோ அதுபோல இங்குள்ள சங்கம் பழவகைகளையும் சகலவிதமான காய்கறிகளையும் முட்டையையும் விருத்தியாக்க அங்கத்தவருக்கு உதவி செய்து பின் அவற்றை அங்கத்தவருக்காக விற்பனை செய்கின்றது. வாரத்திற்கு இருமுறை பெரிய ஏலம் நடத்தப்படுகின்றது. சங்கத்தின் லொறிகள் அங்கத்தவரின் விளைபொருள்களை ஏலமண்டபத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றன. பின் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை அடுக்கி ஏலத்தில் விடுகின்றார்கள்.

இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் கூட்டுறவுச் சங்கங்களைப் பார்ப்பதும் அவைகளைப்பற்றி வாசிப்பதும் எனது முக்கியமான முயற்சியானாலும் இடையிடையே மற்றும ஸ்தாபனங்களையும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவதானிப்பதற்கு பிரிட்டிஷ் சங்கம் போதிய வசதி அளித்தது. விளைபொருட் சங்கத்தைப் பார்த்த அதே நாட் சாயந்தரம் செல்ரன்காம் என்ற பட்டினத்தின் நகரசபைக் கூட்டம் ஒன்றிற்குச் சென்றேன். மேயர் தமதுபதவிக்குரிய உடையுடன் வந்து அமர்ந்தார். அவரின் வலப்பக்கத்தில் உதவிமேயரும் இடப்பக்கத்தில் கொமிஷனரும் இருந்தார்கள். கூட்டம் ஈஸ்வர பிரார்த்தனையுடன் ஆரம்பித்தது. சென்ற கூட்டவரலாறு உபசபைகளின் அறிக்கை முதலியன வாசித்து அங்கீகரிக்கப்பெற்றன. இதன் பின் உற்சாகமான தர்க்கம் நடைபெற்றது. யுத்தத்துக்குப் பின் நகரசபையாற் கட்டப்பட்ட தற்காலிக வீடுகளுக்கு வர்ணம் பூசுவ

[தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க]

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ தேசியக் கடன் விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சிறிது கடன்பட்டு என் கனிஷ்ட புத்திரனுக்குக் கர்ணபூஷணம் செய்து நான்கு நாட்கள் கொண்டாடப் பெரியோர்கள் நிச்சயித்தார்கள்.

# வாழ்க்கைச் செலவு

**சந்நியிற் கூடிய வம்பர்**

மகாநாட்டில் தலைமை வகித்துக்கொண்டிருந்தேன். என்னைச் சீக்கிரம் வரும்படி உள்நாட்டு மந்திரி செய்தி அனுப்பினார். மகாநாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட்டு ஓடோடியும் சென்றேன். உள்நாட்டு மந்திரி ஸ்ரீபதி ......... நாடியிற் கை கொடுத்தவண்ணம் ஆழ்ந்த யோசனையிலிருந்தார். அவரை அணுகி அவசர அழைப்பிற்குக் காரணமென்னவென்று வினவினேன். கிடைத்த பதில் என்னை அதிரச் செய்துவிட்டது. எங்கள் குடும்ப வாழ்க்கைச் செலவு திடீரென்று அதிகரித்ததின் நிமித்தமாகக் கையிலே கடிக்கத் தொடங்கிவிட்டது. பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த சேமிப்புகளும் நகை நட்டுகளும் தீர்ந்துபோய் உள்நாட்டு மந்திரியின் காதணியே எஞ்சியிருந்தது. அதற்கும் காத்திருந்த கடன்காரரோ பலர்.

விஷயத்தை கோடியாகப் பரிசிலனை செய்வதற்குக் கபினட் உடனே கூடவேண்டியதாயிற்று. எல்லாக் கோணங்களிலிருந்தும் நிலைமையை ஆராய்ந்தோம். இந்நிலைமைக்குக் காரணம் பொருள்களின் விலை விஷம்போல ஏறிக்கொண்டிருப்பதுதானென்று தெரியவந்தது. இதைத் தடுப்பதற்கு வழி வகைகளைக் கண்டுபிடித்துக் கையாளுவதற்கு மூவர் கொண்ட உப சபையொன்று நியமிக்கப்பட்டது. உள்நாட்டு மந்திரியை அக்கிராசனராகக் கொண்ட இச்சபையில் மற்றைய இருவரும் உணவு மந்திரியும் (கூப்பன் கடைக்குச் சென்று உணவுப் பொருள்களை வாங்குவதினால் என் மகனுக்கு இதொழில் கிடைத்தது) பொக்கிஷ மந்திரியுமாகும் (என்மகள்). எங்கள் குடும்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு எந்தக் கைதேர்ந்த நிதி மந்திரியாலும் இயலாது.

குடும்ப வருமானமென்பது எனக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளமேயாகும். இதில் குடும்பத்தி லுள்ளவர்களின் உணவு உடை போகப் பள்ளிக்கூடச் செலவு பிரயாணச் செலவு முதலியன சமாளித்தாகவேண்டும். இனி விருந்தினரை உபசரித்தல், பேசும் படமோ களியாட்டமோ பார்த்தல், தெய்வ வழிபாடு, தர்ம கைங்கரியங்கள் முதலியனவற்றிற்குப் பணத்திற்குத் திருவுளச்சீட்டுத்தான் போடவேண்டியிருந்தது. அதிர்ஷ்டவசமாக எங்களுக்கும் ஒரு கொழும்புத் திட்டமிருந்தது. அதன்படி பணக்காரப் பாட்டி ஒருத்தி மாதாமாதம் என் மகனின் (உணவு மந்திரி) படிப்பிற்காக ரூபா பதினைந்து கொடுத் துதவிவந்தார். அந்த ரூபா பதினைந்து வருவதும் போதும், பாட்டியின் பிருக்கலைச் சமாளிப்பதற்கு நாங்கள் படும் பாடும் போதும். இவ்வளவு விஷயங்களையும் அலசி ஆராய்ந்த உப நிர்வாக சபை சிபார்சு எதுவும் செய்வதற்கு இயலாமல் தத்தளித்தது. உணவு மந்திரி (என் மகன்) உள்நாட்டு மந்திரியின் (என் மனைவி) சேலைகளுக்கென ஒதுக்கிய பணத்தில் வெட்டுதல் வேண்டுமென்று விவாதித்தார். உள்நாட்டு மந்திரியோ உணவு மந்திரியின் 'பொக்கெற்'செலவில் குறைக்க வேண்டுமென்று சிபார்சு செய்தார். செலவில் வெட்டுகள் செய்வதற்கு இயலாமற் போகவே வருமானத்தைக் கூட்டும் வழிவகைகள் ஆராயப்பட்டன.

## உணவு உற்பத்தி

காய் கறித் தோட்டம் ஒன்று உண்டாக்கினோம். அதில கத்தரி, மிளகாய், தக்காளி முதலிய காய் கறிகளும், வாழையும் நாட்டினோம். நீர்ப்பாய்ச்சல் திட்டம் வகுத்து ஒழுங்காகத் தண்ணீர் விட்டுக் கத்தரி மிளகாய் பயன்தரும் நாட்களும் வந்தன. ஆனால் அடுத்த வீட்டு எருதிற்கு எங்கள் கஷ்டம் தெரியுமா? ஒருநாள் இரவோடு இரவாக வேலியைப் பிய்த்துக்கொண்டு தோட்டத்தில் பச்சிலை ஒன்றேனுமில்லாமல் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டது. காய் கறி உற்பத்தி அத்துடன் நிற்கவே, கோழி வளர்ப்பதென்று முடிவு செய்யப்பட்டது. உடைக்கு என்று ஒதுக்கி வைத்த பணத்தைக்கொண்டு மூன்று பேட்டுக்கோழிகளும

✕✕✕✕✕✕✕✕✕✕✕✕

— நடமாடி —

✕✕✕✕✕✕✕✕✕✕✕✕

ஒரு சேவலும் வாங்கினோம். ஒருகிழமை சுமாராக நின்றது மன்றிச் சில முட்டைகளையும் இட்டன. ஒரு இரவு காட்டுப் பூனைக்குப் பொறுக்கவில்லை; சேவலைக் கொண்டுபோயிற்று. அது தன் குட்டிகளுக்கும் இன பந்துக்களுக்கும் விருந்தளிக்கும் நோக்கமாகச் செய்திருக்கலாம். ஆனால் எங்கள் வருவாய்க்கு உலை வைக்கிறதென்று உணராதது வருந்த வேண்டிய விஷயம். எஞ்சிய மூன்று பேட்டுக்கோழிகளில் ஒன்று கோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டது. ஒன்றை இருந்தாப்போல் காணவில்லை. எங்கள் வீட்டிற்கணித்தாக ஒரு கள்ளுக் கடை இருக்கிறது. கள்ளுக்குச் சுவையாக அமையவேண்டுமென்று பிரமன் அதன் தலையில் எழுதினானோ என்னவோ யார்கண்டார்! எஞ்சிய ஒரு கோழிமாத்திரம் எங்கள் வீட்டிலிருக்கும் நெல் முதலிய தானியங்களுக்குச் செலவுண்டாக்குவதற்குச் சீவித்திருக்கிறது. உற்பத்திப் படலம் முடிவுற்றது.

பின்னர் தேசியக்கடன்விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சிறிது கடன்பட்டு என் கனிஷ்டபுத்திரனுக்குக் கர்ணபூஷணம் செய்து நான்கு நாட்கள் கொண்டாடப் பெரியோர்கள் நிச்சயித்தார்கள். அதன்படியே சுற்ற மித்திரருக்குப் பறந்தது அழைப்பிதழ். அவர்களை இனசன பந்துக்களுடனும் குடும்ப சமேதராயும் வந்து எங்களை ஆசீர்வதித்து இயன்ற பண உதவிபுரிந்தேகுமாறு வேண்டினோம். கல்வில் நாருரித்தல் என்பார்களே, அது நம்மவர்களின் ஈகையைப்பற்றி எழுந்த உவமை போலும். சிலர் கடன் சொன்னார்கள். பலர் மிகக் குறைவாகக் கொடுத்தாலும் தங்களுக்குச் செய்யவேண்டிய சீர்வரிசைகள் சரிவர நடக்கிறதா என்றுமட்டும் பார்த்துக்கொண்டார்கள். கடைசியில் பட்ட கடனை அடைப்பதற்கே சேர்ந்த பணம் கண்டிருந்தது. எங்கள் பிரயாசம் வீணாயிற்று.

எங்கள் மும்மந்திரிகள் கொண்ட உப சபையின் பிரயாசங்களையெல்லாம் வியர்த்தமாகச் செய்ததில் எங்கள் கடைக்காரரும் ஒருவரே. சாமான்கள் விலை நகரங்களில் பத்துவிதம் உயர்ந்தால் கடைக்காரர் இருபதுவிதம் உயர்த்துவார். அதற்குமாறாக இறங்கிவிட்டாலோ சாமான் [illegible] எங்கள் [illegible] ரசித்தவர்கள் எருதும காட்டுப்பூனையும் மாத்திரமன்று, எங்கள் கடைக்காரரும் கூடவே.

இவ்வளவு நடந்தும் இன்னும் இருக்கிறோம் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? அதைப்பற்றித்தானே சொல்ல வந்தேன்! நம் நாட்டு நடுத்தர வகுப்பாரின் சாமர்த்தியம் அதுதானே? எங்கள் மந்திரிகள் சாமானியப்பட்டவர்களா? அவர்கள் வகுத்த திட்டமல்லவா எங்களைப் படுகுழியிலிருந்து காப்பாற்றிற்று. ஆனால் அத்திட்டத்தின்படி யாவரும் ஒழுகினால் வந்தது கஷ்டம். அது எங்கள் குடும்பத்திற்கென்றே வகுத்தது. மற்றவர்கள் பின்பற்றுவது சாத்தியமில்லை. என்றாலும் நீங்கள் அறிய ஆவலுள்ளவர்களாக இருப்பதனால் சொல்லிவிடுகிறேன்.

திட்டம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக உணவு. காலையிலெழுந்தவுடன் காப்பி சாப்பிட்டும் பழக்கமேற்பட்டிருக்கிறதல்லவா? அதற்குக் காப்பி சர்க்கரை முதலியன தேவை. குடியாமலும் இருக்கவியலாது. ஆகவே காலையிலெழுந்தவுடன் பல்லிற் குச்சியை வைத்துக்கொண்டு கடைப்பக்கம் போவேன். வம்பர் மகா சபை கூடும். அதில் அக்கிராசனம் வகிக்கவேண்டியது தான. யாராவது காப்பி சாப்பிட அழைப்பார்கள். உள்ளூரா ஆசையிருந்தாலும் இல குவிற் போவதில்லை. சற்றுப் 'பிகு' பண்ணித்தான் போவேன். ஆகவே, என்னுடைய கன்னம் பிடிபடாமற் காலைக் காப்பி ஆகிவிடும். இதே யுக்தியைக் கையாண்டு என் மனைவிக்கும் அவள் அண்ணன் வீட்டிலும், மகனுக்குப் பள்ளிக்கூடத்திலும் மகளுக்குச் சிறியதாய் வீட்டிலும் காப்பி கிடைக்கும். இனி மத்தியானப் போசனத்திற்கு வேண்டிய பதார்த்தங்களில் விலை கூடியவைகள் ஏதும் இல்லாவிட்டால் அயல் வீடுகளில் சிறிதாகத்தண்டல் நடக்

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

# பார்சேனைப் பழந்துணுக்கு

— அ. வி. ம. —

**வெ**ருகல்கங்கையின் பக்கத்திலுள்ள இப் பழந் தமிழர் வாழும் தொல்பதியில் ஒரு நாள், வேடன் முத்தனும் வேடுவிச்சி இராமாயியும் ஓர் ஒற்றடிப் பாதையில் சந்தித்தார்கள். வாலிபப் பராயத்தவர்கள் இவர்கள். "யாயும் ஞாயும் யாராகியரோ" என்ற முறையில் கொதுமலராகிப் பின் இனமும் கொண்டாடினர். பொதுநோக்கின் பின் சிறப்பு நோக்கும் நோக்கினர். ஐயுற்றுத் தெளிந்தனர். பின்னர்,

"என்ட கண்ணுக்குள்ளிருக்கும்
 கருமை மொழியாரே
நானறிவேன் உன்னருமை
 நாடறியப் போவதில்லை"

என்றான முத்தன். அவளுடைய அருமையிலும் தெய்வம் கூட்டிய தன்மையிலும் மனம் குளிர்ந்து சொன்னானாயினும் இராமாயியின் நாணம் இலேசில் அவளை ஏய்த்துவிடவில்லை.

"கண்ணான மச்சான்என்
 கண்குளிர்ந்த சீதேவியே
ஈரல்குழிந்த மச்சான் நீ
 என்னகதை சொன்னய்கா?"

என்றாள். அவன் அவளுடைய உள்ளத்தையும் கேள்வியின் கருத்தையும் நன்கு அறியாது,

"இதாக்கிணறே
 இரக்கமுள்ள பூமடலே!
வாசமுள்ள வண்டோஉன்
 வாசலுக்கு நான்வருக"

என்று விட்டான். அதற்கு அவளும் அக்கருத்தையே அமைத்து,

"வேட்டைக் கிடாவோ
 வேலியில்லா ஓர்பயிரோ
தருமக் கிணறோ மச்சான்உன்
 சம்மதிக்கு நானிணங்க?"

என்று தருக்கிப் பேசினாள். பின்னர் மிகப்பணிவுடன,

"மாமிமகளோமருகநல்ல மச்சியரே
காமப் பசுங்கிளியே உன்னைக்
 கண்டுகதை பேசவேணும்"

என்று சிறிது ஆற்றினான் வேடன். அவளும் ஆறினாள். ஆறியபின்,

"இராசிப் பொருத்தமில்லை:
இராசாவே பேசாதே நீ" என்றாள். எனினும் பேகின், தான் சொல்லும் துணுக்குகளுக்கு விடைகொடுக்கும்படி கற்பித்தாள். அவனும்தான் இயைத்தான். அவள் அடுக்கினாள்


1. "அறுகிரை சிறுபாத்தி அழகுண்டு மணமில்லை."
2. "காட்டுக்குள்ளே கரும் சோலைக்குள்ளே
 கணக்கப்பிள்ளை பெண்சாதி குணுக்குக் குணுக்கென்று தூங்குதிது"
3. "ஆத்தோரம் போற அம்மையாருக்கு அறுபதுகட்டு வில்லம்பு".
4. "காட்டிலே நிற்குமரம் என்னமரம் ஐயா
 கள்வர்கொண் டோடுமரம் என்னமரம் ஐயா
 இரும்பைத் துளைக்குமரம் என்னமரம் ஐயா
 இருவர்கொண் டோடுமரம் என்னமரம் ஐயா."
5. "அங்காலேயும்இங்காலேயும்ஓடை,நடுவே கத்தரி வாழை,
 இந்தநொடி அவிட்டவர்க்குச் சந்தனப் பூமாலை"
6. "இரண்டு குழிவெட்டி ஒருகணு நட்டேன்."
7. "வெள்ளை வழுதுணங்காய் கெறுக்கெனக் கடித்தால்
 கொல்லர் தெருவெல்லாம் கூவென்ற சத்தம்"
8. "காய்க்கும் பூக்கும் கலகலக்கும்
 காக்காய் இருக்கக் கொப்பில்லை"
9. "அரையளவு தண்ணீரிலே வேரழுக நிற்பேன்
 முதலை ராசாக்கள் மோதிவர நிற்பேன்
 தலைா ராசாக்கள் தத்திவர நிற்பேன்
 நெய்முட்டி கொண்டு நெடுந்தூரம் போய்வருவேன்
 பால்முட்டி கொண்டு பலதெருவும் சுற்றுவேன்"

என்று சொல்லிக்கொண்டு இராமாயி வெருகல் வேலாயுதர் கோயில்புக்காள்! முத்தன் பின்தொடர்ந்து கருத்துக் கேட்கின்றான். எழுநாள் செல்லும் என்றொரு ஓசை பிறந்தது!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்ராச்சியங்கள் உறவு




## சமய ஸ்தாபனங்களும் அரசியலும்

## ஆசிரியர்களுக்கு அவர்கள் தொழிலே முக்கியம்

22-6-51

சுதந்திர இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் ஐந்தாவது தவணைக் கூட்டகாலம் சென்ற புதன்கிழமை காலையில் ஆரம்பமாயிற்று. ஆரம்ப வைபவ விழா வழக்கமான சம்பிரதாயங்களுடனும் ஆடம்பரங்களுடனும் ஆரம்பமானது. சபை மண்டபத்தில் இரு சபை அங்கத்தினர்கள், நீதியரசர்கள், இராஜியத் தூதுவர்கள், அரசாங்கப் பகுதித் தலைவர்கள் முதலிய பல பிரமுகர்கள் கூடியிருந்தனர்.

மன்னர் பிரானின் பிரதிநிதியாகிய பிரதம தேசாதிபதி தமது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள். "சுதந்திரத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காக என்னுடைய அரசாங்கம் சமாதானத்தை விரும்பும் நாடுகளுடன், விசேஷமாகச் சாம்ராச்சிய நாடுகளுடன், நெருங்கிய உறவை முன்போலத் தொடர்ந்து வைத்திருக்கும்" என்று பிரதம தேசாதிபதி தமது பிரசங்கத்திற் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "வாலிபக் கைதிகளின் பிரச்சினை என்னுடைய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. நவீனமுறையில் கொழும்பில் வாலிபர் நீதிஸ்தலமொன்றை நிறுவத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டார். ஆயுள்வேத வைத்திய ஸ்தாபனத்துக்குப் பண உதவி யளித்தலைப்பற்றிப் பேசிய பின்னர் 1952-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் காட்சி விழாவைப் பற்றிக் கூறினர். கொழும்புத் திட்டத்தின் பிரகாரம் நடைபெறும் இக் காட்சி விழாவுக்கு வேண்டிய ஆயத்தங்கள் யாவும் நடைபெறுகின்றன.

சனப் பிரதிநிதிகள் சபை புதன்கிழமை பிற்பகல் கூடிய பொழுது பலாங்கொடைத் தொகுதியின் முதல் அங்கத்தினர் திரு. ஜயவீர குருப்பு விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். பின்னர் பிரதம தேசாதிபதியின் பிரசங்கத்துக்குப் பதிலளிக்கு முகமாக அவர் சிங்களத்திற் பேசினர். சுதந்திர இலங்கையின் சிருஷ்டி கர்த்தாவாகிய திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்களின் தலைமையில் இலங்கை முன்னேறிச் செல்லும் என்பதிற் சந்தேகமில்லையெனக் குறிப்பிட்டார்.

### விவேகானந்த சபை

விவேகானந்த சபையின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் பதினன்காம் திகதி மாலை நடைபெற்றது. கூட்டத்திற்கு அநேக அங்கத்தினர் சமுகமளித்தனர். கதிர்காம விழாவில் இந்துக்களுக்கு ஏற்படும் சில கஷ்டங்களை நிவர்த்தி செய்ய இச்சபை பெரிதும் முயன்ற வரலாறு அறிக்கையிற் குறிக்கப்பட்டிருந்தது. சிறைச்சாலைக்குச் சென்று சமயபோதனை நடத்தி வந்த அங்கத்தவர்களின் அருந்தொண்டைப் பாராட்டி ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. பின்னர் சில திருத்தப் பிரமாணங்கள் விவாதிக்கப்பட்டன. சபையார் நடாத்தும் விவேகானந்த வித்தியாலயத்தில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் சபையின் நிர்வாக உத்தியோகங்களுக்குப் போட்டியிடுதல் அல்லது சில உத்தியோகத்தர்கள் சார்பாக வாக்குகளைச் சேகரித்துக் கொடுக்க முயலல் விரும்பத்தக்கதன்றாதலின் அவர்களுக்கு இத்தேர்தலில் வாக்குரிமையளிக்கக்கூடாது என்ற திருத்தப் பிரமாணம் விவாதிக்கப்பட்டபொழுது இதற்குச் சாதகமாகவும் பாதகமாகவும் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. சபையின் வித்தியாலயத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அதன் நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவில் பங்குபற்றுவதால் ஏற்படும் தீமைகளைப் பற்றிச் சிலர் எடுத்துக் கூறினர். இவ்வித திருத்தம் எப்பவோ செய்திருக்க வேண்டுமெனக் கருதினர். இன்னுஞ் சிலர் வித்தியாலய ஆசிரியர்கள் அனுபவித்து வந்த உரிமையை மறுக்கக் கூடாதென வாதாடினர். வித்தியாலய ஆசிரியர்கள் கடந்த வருடம் தொடக்கமாகவே இவ்வித தேர்தலில் தோயநேரிட்டதென்றும், இது இறுதியிற் கெடுதியான கோயாகப் பரவக்கூடுமெனவும் சிலர் எச்சரிக்கை செய்தனர். வித்தியாலய ஆசிரியர்கள் கடந்த வருடத்துக்கு முன்னுள்ள 23 வருட காலமாக நடந்து வந்ததுபோல இவ்வித தேர்தல்களில் ஈடுபடாமல் தம் ஆசிரியத் தொழிலில் கண்ணுங் கருத்துமாய் இருப்பது நல்லதென்பதே அனுபவமும் ஒழுக்கமும் வாய்ந்த அறிஞர்களின் அபிப்பிராயம். அன்றேல் கட்சி பேதம் எனும் சூறைக் காற்றில் அகப்பட்டுத் தத்தளிக்க நேரிடும். சமய ஸ்தாபனங்களிற் சமயத் தொண்டாற்றும் சபைகளில் உத்தியோகத்தர் தேர்வுகள் அரசியற் சபைகளிற் போலக் கட்சி வகுத்து நடைபெறுவது கடிந்தொதுக்கப்பட வேண்டியதொன்று. இவ்வருடம் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விவேகானந்த சபையின் முன்னேற்றங் கருதி உழைப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்; விவேகானந்த வித்தியாலயம் விஸ்தரிக்கப்பட வேண்டியது அத்தியாவசியம். இத்துறையில் இப்புதிய உத்தியோகத்தர்கள் ஊக்கமாக உழைத்துவரல் வேண்டும். இதனை ஓர் ஆங்கில இந்துக்கல்லூரியாக மாற்றியமைப்பதும் தகும்.

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]




# மந்திரத்தில் மாங்காய்...

கல்லெறிந்தாலன்றிக் கனி கையிற் கிட்டாது.

★



சேமித்தாலன்றி உங்கள் எதிர்கால வாழ்க்கையிற் காத்திருப்பனகைகூடா.

சேமிக்க இலேசான வழியுண்டு. 10 சதம்; 25 சதம்; 50 சதம்; 1 ரூபா என்ற விலைகளில் தேசிய சேமிப்பு முத்திரைகள் விற்கப்படுகின்றன. தினமும் முத்திரைகளைச் சேர்த்துச் சேமப் பத்திரங்களை வாங்கலாம். இவைகளில் திரளும் பணம் உங்கள் எதிர்காலச்செல்வமாகும்.

★

# தேசிய சேமிப்பு இயக்கம்

[4333]


## வானிசை

● வசந்தன் ●

### கொழும்பு வானொலி

11-6-51

திரு. எஸ். எம். சேவியர்

புல்லாங்குல்–இவர் வெகு சிரமப்பட்டுப் புல்லாங்குழல் வாசிக்கிருர். பூர்ண சந்திரிகா இராகப்பாட்டுச் சுமாராயிருந்தது. பந்துவராளி இராகம் வாசித்தார். கற்பனைகள் அவ்வளவு காண்பதற்கில்லை. கமகங்களும் தெளிவாயில்லை.

ஒலிப்பதிவு

இரவு எட்டரை மணியிலிருந்து ஒன்பது மணிவரை ஒலிப்பதிவுப் பாடல்கள் சிலவற்றைக் கேட்டோம். ஒலிப்பதிவை ஒலிபரப்புவதிலும் ஒரு நுட்பம் இருக்கிறது. குரல் ஒற்றுமையுள்ள பாடகிகளின் ஒலிப்பதிவுகளை ஒலிபரப்புவதையும் ஒரே சுருதியிற் பதிவு பெற்றபாடல்களை ஒலிபரப்புவதையும் போன்றவற்றைக் கவனித்தல் அவசியம். பாடல் ஒலிப்பதிவு நிகழ்ச்சி வயலின் வாசிப்புடன் முடிவுற்றது. இது அஞ்சல் நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்தியது.

12-6-51

திரு. கே. ஆர். நடாராஜன்

இவரது 'சோபில்லு' என்ற ஜகன்மோகினிப் பாட்டு எடுப்பாயிருந்தது. கற்பனைசுரம் உச்சிதம். வாசஸ்பதியிற் பாடிய 'பராத்பரா' அவ்வளவு சோபிக்கவில்லை. இந்த இராகத்தை இவர் ஆரம்பித்த விதமே அதற்குக் காரணமாகும். இன்ன சுரத்தில் ஆரம்பித்தால் இராகச் சாயை வெளிப்படும் என்பதை இவர் கவனித்திருக்க வேண்டும். சுரம் பாடியது, சுமாராயிருந்தது. இவருடைய முகாரி என[...] மிகவும் பிடித்திருந்தது [...]ப்படியையும் வெகு அ[...]கப் பாடினர். வயலின் [...] சித்தவர் இடையிடை[...] சுரங்கள் வாசிக்கும் பே[...] கோளாறு பண்ணினர்.

இப்பாடகர் சாரீரத்[...] பண்படுத்திக் கனமேற்[...]வது அவசியமாகும்.

திருமதி பரஞ்சோதி அம்ம[...]
இராசமாணிக்க[...]

இவருடைய சாரீரத்தி[...] 'பிசிர்' அதிகம். நினைத்த ச[...]கதிகள் பேசவில்லை. சுரு[...] இடையிடையே விலகுகிற[...] பதட்டம் அதிகமிருக்கிற[...] இவர் பாடிய சாருகேசி ந[...]ருயிருந்தது.

13-6-51

திருமதி மகேஸ்வரி அப்பாத்துரை

வீணை–இந்த வீணைக்கச்சேரி குழப்பமின்றி அமைந்திருந்தது. வாசிப்பில் அமைதியிருக்கிறது. வாத்தியத்தில் இன்னும் சுகம் ஏற்படவேண்டும். பைரவி சம்பிரதாய உருவத்துடன் விளங்கியது.

15-6-51

திரு. ஏ. நடராஜா

இவரது தோடி இராக ஆலாபனையும் அதிற் பாடிய 'எந்துகுதய' என்ற கீர்த்தனமும், சுரம்பாடிய முறையும் நன்று. அடுத்துக் கல்யாணி இராகமும் உருப்படியும் சுமாராக இருந்தன.

திரு. எஸ். கே. பத்மநாதன்

நாகசுவரம்–இவர் 'கானமுதபானம்' என்ற ஜோதிஸ்

[தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1930

# ஈழகேசரி

சுன்னாகம், கரவரு ஆனி ௧௦
— காந்தி ஆண்டு 82 —
போன் தந்தி இல. 805

## சீதனம் வழங்கல்

பெண்களுக்கு விவாக காலங்களிற் சீதனம் வழங்கும் முறை நேற்று இன்று ஆரம்பித்த வழக்கம் அன்று. கீழைத்தேச நாடுகளிலே தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வரும் ஒரு வழக்கமாகும். இதை ஆதரிப்பாரும், ஆட்சேபிப்பாரும் பலர் உளர். சென்ற சில ஆண்டுகளாக, இவ்வழக்கம் மக்களின் முன்னேற்றத்துக்கு மிக்க தடையாக உள்ளதென்றும், அது முற்ருக நீக்கப்படவேண்டுமென்றும் ஒரு கட்சியினர் மிகப் பிடிவாதமாக எதிர்த்து வருகின்றனர். இவர்கள் எடுத்துக் காட்டும் காரணங்கட்கு ஆதாரமில்லாதுபோகவில்லை. எத்தனையோ பெண்கள் ஏற்ற காலத்தில் விவாகஞ் செய்யாது வாளாவிருக்க வேண்டியதற்கு இந்தச் சீதனம் வழங்கும் முறையே முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது. இவ்வழக்கத்தை முற்ருக நீக்கிக்கொண்டாற் சமூக வாழ்க்கை சீரும் சிறப்பும் அடையக் கூடுமென்பது பலரது நம்பிக்கை.

இந்தியாவிற் பெண்களுக்குச் சீதனம் கொடுக்கப்படக் கூடாதென்று அரசினர் சட்டம் இயற்றவேண்டுமென்றும், அதற்கு விரோதமாக நடப்போர் தண்டிக்கப்படவேண்டுமென்றும் டில்லியிலுள்ள மத்திய பிரதிநிதி சபையிலே தீர்மானங் சமர்ப்பிக்கப்பட்டுள் ன. இச்சட்டம் அவசிய ன பிரதிநிதிகள் பையின் பெண் அங்கத்த களே மிக முனைந்து ழைத்து வருகின்றனர். வ்வழக்கத்தைச் சட்டமூல கத் தடுப்பதைப்பற்றிப் லபட அபிப்பிராயங்கள் தான்றியுள்ளன. பெண்க க்குச் சீதனங் கொடாவி ன் பின்னர் தாய் தந்தை ர் தமது ஆஸ்திகளை யாருக் க் கொடுப்பது? தம்மு டைய புத்திரர்கட்கே கொ க்கவேண்டியதாகும். னவே சகல சம்பத்துக்க ளும் ஆண்பிள்ளைகளைச் சேர் வதாயின் அடுத்தபடியாக இன்னொரு திண்டாட்டம் ஏற்பட்டுவிடும். பெண்கள் முதுசொம் இல்லாத ஆண்களை விவாகஞ்செய்ய மறுக்க ஆரம்பிக்காரா? பின்னர் அதற்கும் சட்டம் ஏற்படுத்தித் தடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் வராதா? விஷயமப்படியாயின் தாய் தந்தையர் தமது பொருளை யாருக்குக் கொடுப்பதென்ற கேள்வி எழுந்துவிடும்.

இலங்கையிலும் இவ்விஷயமாக மிக்க பரபரப்பு ஏற்பட்டுவருகின்றது. கல்வி மந்திரியார் கே. கனகரத்தினம் அவர்கள் இவ்விஷயமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார். சீதனம் வழங்கும் முறை சமுதாய முன்னேற்றத்துக்கு மிகப் பாதகமாக இருக்கின்றதென்றும், அதை ஒழிக்க யாவரும் உறுதியாக நின்று உழைக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார். பெண்கள் எல்லாரும் ஒருங்கு திரண்டு சீதனத்தை எதிர்க்கும் இயக்கமொன்றினை ஆரம்பிக்கும்படியுங் கூறினர். இப்படியாகச் செய்தால் இவ் வழக்கம் நின்றுவிடுமா என்பதைப் பற்றி எப்படி நிச்சயமாகக் கூறுவது? மேலும் அரசினர் இது விஷயமாகச் சட்டமியற்றி நன்மையைக்கொண்டுவருவதும் இலகுவிற் கூடியதொன்றன்று. இவ்வழக்கம் சமுதாய முன்னேற்றத்துக்குப் பெருந் தடையென்பதை யாவரும் அங்கீகரித்துள்ளார். எனவே எல்லாரும் சேர்ந்து இதற்கு மாருகப் பிரசாரஞ் செய்து மக்கள் மனதில் இதன் தீமைகளைப் பதியும்படி செய்ய வேண்டும். குடும்பவாழ்க்கையை நடத்தும் பெண்களுக்குச் சீதனம் இன்றியமையாததென்ற பிழையான கொள்கையையும் எண்ணத்தையும் முற்ருக நீக்க முயலவேண்டும். அப்போதுதான் இந்தக் கொடிய வழக்கத்துக்கு எல்லையைக் காணலாம்.

மேலைத்தேச நாடுகளிற் பெண்களுக்குச் சீதனம் கொடுக்க வேண்டுமென்ற நியதியாவது வழக்கமாவது இடையாது. காதல் விவாகமே அங்கு பெரிதும் கையாளப்பட்டு வருவதாற் சீதனத்தைப்பற்றி அக்கறை எவரும் காட்டுவதில்லை. கல்வி, ஒழுக்கம், நற்குணம், பண்பாடு முதலியனவே பெண்களுக்கு இன்றியமையாத ஆபரணங்களாகக் கருதப்படுகின்றன. அப்படியான மனப்பான்மை நம் நாட்டு மக்கள் மனதிலும் உண்டாகச் செய்யின் இந்தக்கொடிய வழக்கம் நம்மைத் துன்புறுத்தச் சந்தர்ப்பம் ஏற்படாது. கல்வி கற்றுத் தேறிய ஆண்களும் பெண்களும் தாம் சீதனத்தை விரும்புவதில்லையென்று தம்மைத் திடப்படுத்த வேண்டும். சீதனத்தை மாத்திரம் பெரிதாக மதித்து விவாகஞ் செய்யும் ஆடவரின் ஆண்மைதான் என்ன? பெண்களுக்கு அமையவேண்டிய எத்தனையோ அரிய பெரிய குணங்கள் இருப்ப, அவைகளைப் புறத்தேவிட்டுச் சீதனமொன்றைக் கருத்தில் ஆடவர் கொள்ளும் வரையும் நம் நாடு உயர்வடைவதெப்படி? ஆகவே, இந்தக் கொடிய காலத்துக்கும் தேச நலத்துக்கும் ஒவ்வாத இந்தப் பிற்போக்கான வழக்கத்தை ஒழிக்க யாவரும் முயல வேண்டும்.

## பாதை ஓரத்தில்

நாடு சுதந்திரம் பெற்றுவிட்டால் அங்கு நிலவுவது நல்ல அரசாங்கம் என்பது கருத்தல்ல. கூட்டங்கள் கூடி அறிக்கைகள் சமர்ப்பித்தவுடன் யாவும் சரியாக நடைபெற்று வருவதாக இன்று அதிகாரத்தில் உள்ள கட்சி கருதிவிடுகின்றது. கட்சிமட்டும் உழைத்தாற் போதாது. அதன் ஆதரவில் ஆட்சி செலுத்தும் அரசாங்கமும் தக்க வகையில் மக்களுக்கு ஆகவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும். எத்தனை திட்டங்கள் வகுத்தாலென்ன, எத்தனை நிபுணர்களை இறக்குமதி செய்தாலென்ன, நாட்டு மக்களிடையே அதிருப்தி ஏற்படுமாயின் அந்த அரசாங்கம் ஒருபோதும் நிலைத்து நிற்கப்போவதில்லை. இதை மனத்திற் கொண்டு அதிகாரம் வகிப்பவர்கள் நடந்துகொண்டால் அவர்களின் எதிர்காலம் பிழைப்படாது. நாட்டிலும் நல்ல அரசாங்கம் நிலைபெற ஏதுவாகும்.

### ஒரே குடும்பம்

தேசத்தின் தந்தையென்று வழங்கப்படும் எங்கள் பிரதமர் சேனநாயகா ஸ்ரீ லங்காவிலுள்ள அனைவரும் தம்மை ஒரு குடும்பத்தவர் என நினைந்து ஒற்றுமையாக வாழவேண்டுமென ஆசைப்படுகின்ருர். இந்தக் காலத்திற் குடும்பங்களிடையே வேற்றுமைகள் தலைதூக்கி நிற்கின்றன. எனவே, அரசியற் றலைவர்களிடம் ஒற்றுமையை எதிர்பார்ப்பதுவீண். நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் இன்புற்றிருக்கவேண்டுமென அனைவரும் எண்ணுவார்களாயின், அவர்களின் போக்குகள் எப்படியிருந்தாலும் அதில்ஒருபிழையுமில்லை

### ஒட்டகம் விஜயம்

பாகிஸ்தானிலிருந்து இரு ஒட்டகங்கள் இலங்கைக்கு வந்துள்ளன. இந்த உயர்ந்த மிருகங்களைப் பாகிஸ்தான் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றது. ஒட்டகத்துக்கு இடங்கொடுத்த அராபியனின் கதை பலருக்கும் நினைவில் இருக்குமென நம்புகின்றேன். பாகிஸ்தான்காரரும் ஒட்டகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இலங்கைக்குள் நுழைந்துகொண்டால் இலங்கையின்கதி யாதாகுமோ?

### பொது அறிவுப் பயிற்சி

பள்ளிக்கூடங்களிற் பொது அறிவுப் பயிற்சி நடைபெற்றுவருகின்றன. ஈழகேசரி வாசகர் ஒருவர் தமது பிள்ளைகள் இருவர் படிக்கும் பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற பொது அறிவுப் பரீட்சைத் தாள்களினின்றும் சேகரித்த சில கேள்விகளை எமக்கு அனுப்பியுள்ளார். அவற்றுட் சில வருமாறு;

1. பிழைகளைத் திருத்தி எழுதுக: வையிக்கல் விற்குமிடம், மலம் களிக்குமிடம்.
2. பின் வருவனவற்றிலுள்ள பிழைகளைக் குறித்துக் குறிப்பெழுதுக: ரியூப், ரயர்; டியூப், டயர்; தியூப், றயர்; தியூப்பு, தயர்,
3. சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம், மதுரைத் தமிழ்ச் சங்கம், யா. ஆ. தி. பாஷாபிவிருத்திச் சங்கம் என்பன வழங்கும் தமிழ்ப்பட்டங்கள் எவை?

இப்படி இன்னுஞ் சிலவற்றை அடுத்தவாரம் குறிப்பிடுவேன்.

## இன்பத் தமிழ்

### 'ஈழகேசரி'க்கு வாழ்த்து

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் வீர சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதுவதாவது:

தமிழ்ப் பெருவிழாவுக்கு வந்திருந்த நாவலர்களின் படங்களைத் தீட்டி, அதன் கீழ் இன்பத்தமிழ், பைந்தமிழ், சிந்தனைத்தமிழ், கன்னித் தமிழ், வீரத்தமிழ் என்றெல்லாம் மிக மிகப் பொருத்தமாகப் போட்டிருப்பதைக் கண்டு என் கண் குளிர்ந்தது. ......தமிழ்விழாவில் இசை விழா என்ற தலைப்பும் இசைவாக அமைந்தது.......

அருமை! தமிழ்த்தாயின் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து ஈழகேசரியை வாழ்த்தி வழுத்துதும்.

## சாம்ராச்சியங்கள் உறவு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்பு இந்துக்கல்லூரி

இந்துக்கல்லூரி ஸ்தாபகர்கள் புதிதாக நிறுவிய மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஈசானசிவாசாரியர் அவர்களே முதன் முதலாகச் சைவப் பிரசங்கம் செய்தார்கள். நீதியரசர் சி. நாகலிங்கம் அவர்கள் தலைமை வகித்துத் தமிழிற் பேசினுர்கள். சைவ மக்களுக்குச் சமயக் கல்வி அத்தியாவசியம் என ஸ்ரீ ஈசான சிவாசாரியார் கடல்மடை திறந்தாற் போலச் சொற்பெருக்காற்றினர்.

### பஸ் கியூ வரிசை

காலையிலும் மாலையிலும் பஸ் வண்டிக்காகக் காத்துநிற்கும் சனங்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதை நிவிர்த்திசெய்ய மந்திரியார் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறுர் என்பது தெரியவில்லை. பழையபடி பணித்தியாலக் கணக்காகப் பிரயாணிகள் காத்துக் கிடக்கவேண்டிய நிலைமைதான் ஏற்பட்டுள்ளது.

### முதுதமிழ்ப் புலவர் நிதி

காலஞ்சென்ற முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களின் குடும்பத்தினர்க்கு உதவியளிக்கும்பொருட்டு ஒரு நிதி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸாகிராக் கல்லூரி ஆசிரியர்களும் புலவரின் பழைய மாணவர்களும் அதிக விருப்பத்துடன் இந்நிதிக்குப்பணம் உதவிவருகின்றனர் என அறியலானேன். புலவர்மீது அபிமானமுடைய தமிழன்பர்களும் இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாது தம்மாலியன்றபொருளுதவி புரிவார்களென எண்ணுகிறேன்.

### புதுமைப்பித்தன் குடும்பம்

புதுமைப்பித்தன் தமிழ்நாடு பெற்ற தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். இவர் காலமாகி மூன்று வருடங்கட்கு மேலாகிவிட்டது. இன்று தமிழ் நாட்டுக்கு அவரைப்பற்றிய எண்ணம் உதித்துள்ளது. வறுமையால் வாடும் அவரதுகுடும்பத்திற்கு நிதி திரட்டவேண்டுமெனச் சென்னை எழுத்தாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கையில் உள்ள அன்னுரின் அபிமானிகளும் இந் நிதிக்குத் தாராளமாக உதவுவார்கள் என்பதற்கு ஐயமின்று.

## புதுமைப்பித்தன் நினைவு

புதுமைப்பித்தன் என்ற சோ. விருத்தாசலம் அவர்கள் சிறந்த இலக்கியமேதை என்பது பலரதுஅபிப்பிராயம்.

சென்னை எழுத்தாளர் சங்கம் இம்மாதம் 30-ந் திகதியைப் புதுமைப் பித்தன் நினைவு நாளாகக் கொண்டாடத் தீர்மானித்திருப்பது ஈழத்து அன்பர்கள் அறிந்ததொன்று. பல கூட்டங்கள் மூலமாகவும் பத்திரிகைக் கட்டுரைகள் வாயிலாகவும் புதுமைப் பித்தனின் பெயரைத் தமிழ் நாடெங்கும் விளங்கச் செய்வதற்குச் சென்னைப் பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் முயற்சிசெய்துவருகின்றனர்.

வித்தகன் புதுமைப்பித்தனின் தினத்தைக் கொண்டாடுவதில் மற்றுமோர் முக்கிய குறிக்கோள் இருக்கின்றது. அவரது மனைவியாரையும், செல்வக் குழந்தையையும் பராமரிப்பதற்கு ஒரு நிதி திரட்டுவதே அப்புனித நோக்கமாகும்.

புதுமைப்பித்தனின் மனைவி திருமதி கமலா விருத்தாசலம் இப்போது தமது பெண் குழந்தையுடன் சென்னையில் இருப்பதாக அன்பர் ரகுநாதன் அவர்கள் எமக்கு எழுதிய உணர்ச்சி மிக்க கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார். தாயும் சேயும் இன்று ஆதரவற்றிருக்கின்ருர்கள். அவர்களின் நிலைமையை "விவரிக்க மனங் கூசுகின்றது" என்று அன்பர் எழுதுகின்ருர். புதுமைப்பித்தன் காலமாவதற்கு ஒரு வாரம் முன்னதாக ஈழத்து இலக்கிய நண்பர்களின் பண உதவியை நாடியிருந்தாரென்பதை இங்கு மிக அனுதாபத்துடன்தெரிவிக்க விரும்புகின்றேன். அவருக்கு நாங்கள் செய்யாமற்போன உதவியை அவரது குடும்பத்துக்குச்செய்வதால் ஓர் ஆறுதல் உண்டாகுமல்லவா?

சென்னையிற் புதுமைப்பித்தன் நினைவுநாளை முன்னிட்டு ஒரு நிதி ஆரம்பிக்க உத்தேசம். புதுமைப்பித்தனின் ஈழத்து அபிமானிகளும் தங்கள் பங்கை உதவிப் புதுமைப்பித்தனின் குடும்பத்துக்கு ஆதரவளிக்கவேண்டுமென்பது பலரது ஆசை.

'செத்ததற்குப் பிறகு நிதிகள் திரட்டாதீர்' என்று வேளூர்க் கவிராயர் (புதுமைப்பித்தன்) அன்று பாடினுர். ஆனுல் எம்மைப் பிடித்த சாபக்கேடு சீக்கிரத்தில் மறைவதற்கில்லை. நிதி திரட்டித்தான் ஆகவேண்டும். இது விஷயமாக வீரகேசரி, சுதந்திரன், தினகரன் ஆசிரியர்களுக்கு எழுதியுள்ளேன். இலக்கிய நண்பர்களையும் சிந்தித்து ஆவன செய்யுமாறு வேண்டுகின்றேன்.

—அரியரத்தினம்

### திருத்தம்

இவ்விதழில் 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ள பாடல்களில் முதலாவது பாட்டில் வரும் 'வேருரார்' என்பதை வேளூரார் எனத் திருத்திக் கொள்க.

தேவை

நற்குணமுள்ள வாலிபரும் சிங்களம் பேசக்கூடியவரும், தமிழிற் கடைக் கணக்குகள் கெதியிற்செய்யக்கூடியவரும், வான்-வியாபாரத்தி லனுபவமுள்ளவருமான யாழ்ப்பாண வாலிபருக்கு, எம்மதத்திலென்ருலும் சரி, தகுதி வாய்ந்த முதலாளியின்கீழ் மனேசர், கிளார்க் அல்லது சேல்ஸ்மன் வேலை தேவை

'S. K.' c/o ஈழகேசரி, சுன்னுகம், என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

[4328—ii]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

✻ புதிய கட்சி உண்மையில் இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்று நாட்டில் உறுதியடையுமா என்பதுதான் கேள்வி.

# புதிய கட்சி உருப்படுமா?

## தியாகம் செய்த தலைவர்கள் கதி

**காங்கிரஸிலிருந்து** பிரிந்துசென்றவர்கள் ஒன்றுசேர்ந்து புதிய எதிர்க்கட்சியொன்றை அமைத்துள்ளனர். இக்கட்சியின் தலைவர் ஆசாரியர் கிருபளானி ஆவர். பல விதத்திலும் காங்கிரஸ் கட்சி மிக்க கேவல நிலையை அடைந்துவிட்டதென்றும் அதைத் திருத்தியமைப்பது இயலாதென்றுங் கண்டே இப்புதிய கட்சி ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இப்புதிய கட்சிக்கு பிரஜா கட்சி என்றபேர் வழங்கப்பட்டிருக்கின்றது. மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளை முற்றாகத் தழுவியே இக்கட்சி தொழில் ஆற்றுமென்று இதன் தலைவர்கள் கூறினர். இக்கட்சியில் சாதி சமய பேதங்கள் கிடையா. யாவருக்கும் சம உரிமை வழங்கப்படுமெனத் தெரிகின்றது. எல்லா மக்களும் வசிக்கவும், பயிர்செய்யவும் சொந்தமாக நிலம்பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் இக்கட்சி பிரதானமாக ஊக்கங்காட்டி ஈடுபடுமென நம்பப்படுகின்றது. இதன் தலைவராகும் ஆசாரிய கிருபளானி பன்முறை காங்கிரஸ் காரியதரிசியாகக் கடமையாற்றியவர். ஒருமுறை தலைவராகவும் இருந்தவர். அரசியல் வாழ்வினைத் தூய்மைப் படுத்தவே தாம் புதிய கட்சியை ஏற்படுத்த நேர்ந்ததெனக் கூறியுள்ளார். அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவது தமது நோக்கமல்லவெனவும் தெரிவித்தார். பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தின் ஆட்சி நீங்கி நான்கு வருடங்களாகியும் இன்னும் அந்தமுறையே இந்தியாவில் நிலைபெறின் அதற்கு மீட்சி வருவது எப்படி என்று கேட்கின்றார்.

### சித்திக்குமா?

ஏற்பட்ட புதிய கட்சி உண்மையில் இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்று நாட்டில் உறுதியடையுமா என்பதுதான் கேள்வி. காங்கிரஸ் அரசாங்கத்தில் எத்தனையோ ஊழல்கள் ஏற்பட்டுவிட்டன என்பது உண்மையே. அவைகளைத் திருத்தி நன்னிலைப் படுத்தாது அதில் நின்று ஓடுவதும் வேறு கட்சிகளை அமைப்பதும் எப்படி முறையாகுமென்று காங்கிரஸ் தலைவர் திரு தாண்டன் கேட்கின்றார். இப்போது புதிய கட்சியில் மிக்க ஆர்வத்துடன் சேர்ந்திருப்பவர்கள், காங்கிரஸ் கட்சியினின்று நீக்கப்பட்டவர்களும், பதவிகள் கிடையாது, நம்பி மோசம் போனவர்களுமாவர். சுயநலவாதிகளாகும் இவர் இப்புதிய கட்சிக்குப் பெலத்தையும் ஆதரவையும் அளித்து அதனை உருப்படுத்துவார்களென எப்படி நம்புவது? புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாட்டின் அரசாங்கம் சடுதியிற் சிறந்த களங்கமில்லாத நிலையை அடைவது எப்படி? ஆரம்பத்தில் ஊழல்கள் ஏற்படுவது நாதனமானதே. எவ்வளவோ தியாகஞ்செய்து இந்திய சுதந்திரத்துக்காக உழைத்த தலைவர்கள் இப்போது தாம் அங்கத்துவம் வகித்த பெரிய ஸ்தாபனமாகும் காங்கிரஸ் சபையை எதிர்ப்பதும் அதற்கு மாறாகப் புதிய கட்சியை ஏற்படுத்துவதும் காலக்கொடுமை என்றே கூறவேண்டும்.

#### இந்தியா

### காங்கிரஸ் நிர்வாகசபை

காங்கிரஸ் மகாசபைக்கு இதுவரையும் இருந்துவந்த ஆதிக்கத்துக்கு நிகரில்லை. எவரும் அச்சபையின் ஆதிக்கத்தைக் கண்டு அச்சமும் மதிப்புங் காட்டிவந்தனர். இப்போது இந்தப் பெரிய ஸ்தாபனத்துக்குச் சிறிது ஈடாட்டம் ஏற்பட்டுளது. ஆசாரிய கிருபளானியின் தலைமையில் புதிய எதிர்ப்புக் கட்சியொன்று தோற்றிவிட்டது. எனவே காங்கிரஸ் தலைவர்களாகவுள்ளோர் இந்த ஸ்தாபனத்தை தூய்மைப்படுத்தித் திருத்தி அமைப்பது அவசியமாய் விட்டது. அன்றேல் அதற்குள்ள ஆதிக்கம் நிச்சயமாகக் குன்றியேதீரும். காங்கிரஸ்காரிய நிர்வாகசபையின் கூட்டம் அடுத்தமாதநடுப் பகுதியில் பங்களூரில் கூடுவதாக ஏற்பாடுகள் செய்திருக்கின்றார். பிரதமர் நேரு முதலிய தலைவர்கள் சமுகமளித்து அதன் ஆலோசனையில் கலந்துகொள்வர். எத்தனையோ புதிய சங்கடங்கள் நாட்டின் பல பாகத்தில் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன. புதிய பிரஜா கட்சி தோற்றியது ஒரு பக்கமாக நாட்டில் உணவுக் கஷ்டம் யாவரையும் வாட்டுகின்றது. பாஞ்சால மாகாணத்து மந்திரிசபையினர் விட்டுவிலகிவிட்டனர். புதிய மந்திரிசபையை ஏற்படுத்துவதென்பது மகா கஷ்டமாகின்றது. பாஞ்சால நாட்டின் தேசாதிபதி கட்சித் தலைவர்களை அழைத்து மந்திரிசபை அமைக்கும்படி பன்முறை கேட்டும் ஒருவரும் இணங்குகின்றாரில்லை. அத்துடன் பொதுத் தேர்தலும் அடுத்து வரப்போகின்றது. அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யவேண்டும். பொதுவாகக் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் மக்களுக்கிருந்த விசுவாசம் படிப்படியாகக் குறைந்துவருகின்றது. எனவே, காங்கிரஸ் நிர்வாக சபையினர்க்கும் மிக்க நெருக்கடியான காலம் அணுகிவிட்டது.

## வானிசை

5-ம் பக்கத்தொடர்ச்சி

வருபிணிப் பாட்டை நன்றாக வாசித்தார். மோகன இராகத்தை விமரிசையாகக் கையாண்டார். 'நன்னுபாலிம்ப' கச்சிதமா இருந்தது. சில வாத்தியக்காரர் பாட்டுகளைக் கேட்டவுடன் சுலபமாக வாசித்துவிடலாம். என்ற எண்ணங் கொண்டு அவைகளைக் கண்டபடி வாசித்துக் கெடுத்துவிடுகிறார்கள். இராகலக்ஷணங்களையோ பாட்டின் பாவத்தையோ கவனிப்பதில்லை. மெட்டுகளை மொட்டையாக வாசிப்பதுதான் இவர்கள் வேலை. 'தூது நீ சொல்லிவாராய்' என்ற மணிரங்குராகப் பாட்டை இவர் வாசித்தபொழுது, ஒரு இடத்திலாவது மணிரங்கு இராகத்தின் சாயை புலப்படவில்லை. காபி ராகமாகவே இருந்தது.

சதுர் வயலின்

சதுர் வயலின் என்றால் நாலு தந்தி வயலின், ஏழு தந்தி வயலின், போன்ற ஒருவகை வயலின் என்று நினைக்கவேண்டாம். சாதாரண நாலு தந்தி வயலின்களைத்தான் நால்வர் வாசித்தனர். நான்கு வயலின்கள் என்று நிகழ்ச்சியிற் குறிப்பிட்டிருக்கலாம். சதுர்வயலின் தொடங்கி முடியும் வரையும் 'கர்ர்' என்ற சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

'தெலிஸிராம' என்றஉருப்படி தாளப்பிசகோடு பதட்டத்துடன் வாசிக்கப்பட்டது. தேநுகா நன்றாயிருந்தது. தில்லானா கடைசியாக வாசித்திருக்கலாம். வாசித்தவர்களுள் ஒற்றுமை நூற்றுக்கு நூறு இருக்க வேண்டும். மொத்தத்தில் இந்நிகழ்ச்சி நன்றாக இருந்தது.

17-6-51

செல்வி செல்லமணி செல்லையா

வயலின் — இவரது ஞானம் வளர்ச்சியுற இடமிருக்கிறது. வாசித்த பாணி பரவாயில்லை. கற்பனா சுரங்கள் வாசித்தமை திட்டவட்டமாக அமையவில்லை.

இவருடைய கச்சேரியில் அறிவிப்பாளர் செய்த கோளாறு மன்னிக்கமுடியாதது. வாகதீஸ்வரியில் 'நாதனு' என்ற பாடலை வாசிப்பார் என அவர் தெரிவித்தார். ஆனால் செல்லமணி வாசித்தது 'விஜயநாகரி'யில் ஒரு பாட்டு. விஜயநாகரியில் 'விஜயாம்பிகே' என்ற பாட்டை வாசிப்பார் என்று சொல்ல 'வாகதீஸ்வரி'ப்பாட்டை வாசித்தார் செல்லமணி செல்லையா. இக்குறை யாரைப் பொறுத்தது?

திரு. டி. இராஜலிங்கம்

இவர் ஆதார சுருதியைக் குறைத்துவைத்துக்கொண்டு பாடியும்தாரஸ்தாயியில்சஞ்சரிக்கப் பரமசங்கடப்படுகிறார். 'யோசனா' என்ற கீர்த்தனம் நன்றாயிருந்தது. விலாசினி என்ற அபூர்வ இராகத்தை ஆலாபனை செய்தார். இவருடைய முயற்சி நன்று. ஆனால் இராகத்தின் உயிர்நிலையை மாத்திரம் வெளிப்படுத்திச் சொற்ப ஆலாபனத்துடன் நின்றுவிட்டால் நன்றாயிருந்திருக்கும். 'வீடும் அம்பலமாகி' என்ற உருப்படி நன்குச் சாதகப்படுத்தவில்லை என்பது தெரிந்தது. வேளாவளி இராகத்தில் என்ன பிழைப்பு' என்ற பாடலைப் பாடியபொழுது சில இடங்களில் இது கௌரி மனோகரி

[தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க]

# தேர்தல் வதந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக எழுந்த சிக்கலே இதற்குக் காரணமென்பது உண்மையாகும். ஆனால் இந்த 'இராஜினாமா'ப் பூச்சாண்டி முளையிற் கிள்ளப்பட்டதெனத் தெரிகின்றது. ஆனையிறவுத் தொழிற்சாலை விஷயத்தில் மந்திரி பொன்னம்பலம் அவர்கள் தூரதிருஷ்டியுடன் நடந்திருக்கின்றார். காங்கேசன்துறையிலுள்ள சீமேந்துத் தொழிற்சாலைக்கு 'ஜிப்ஸம்' என்ற தாதுப்பொருளே வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படுகின்றது. காரச்சோடாத் தொழிற்சாலை ஆனையிறவிலே தொழிற்படுமாயின் ஜிப்ஸம் என்ற தாதுப்பொருளையும் இலங்கையிலே செய்துகொள்ளலாம். அப்படியாயின் சீமேந்துத் தொழிற்சாலை பிறநாட்டை எதிர்பார்க்கவேண்டியதில்லை.

இந்த இரகசியத்தை நிதிமந்திரி ஜயவர்த்தனா அவர்கள் பிரதமருக்கு எடுத்துக்காட்டிக் குறித்ததொழிற்சாலையை வட இலங்கையில் நிறுவினால் அது சீமேந்துத் தொழிற்சாலைக்குப் பக்கபலமாகிக் கொள்ளலாமெனவும், அப்படியாயின தென்னிலங்கைக்கு எவ்வித 'பிடி'யுமிராதென்றும் எடுத்துக்காட்டி, குறித்த தொழிற்சாலையை வடபகுதியில் நிறுவுவது புத்திசாலித்தனமாகாதென வற்புறுத்தினாராம். பிரதமரும் ஏனைய சில மந்திரிமாரும் அதில் நியாயம் இருப்பதாகவே கண்டனர். ஆகவேதான் ஆனையிறவுத் தொழிற்சாலை அரோகராவாயிற்று. மந்திரி பொன்னம்பலம் அவர்கள் இது விஷயத்தில் ஆராய்வுடனேயே நடந்திருக்கின்றார்.

### முகாந்திரம் மயில்வாகனம்

முகாந்திரம் வி. மயில்வாகனம அவர்களுக்கு அளவெட்டி மக்கள் மகத்தான உபசாரணை அளித்துள்ளனர். சென்ற ஞாயிற்றுக்கிழமை அருணோதயக் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வழக்கறிஞர் எஸ். இளையதம்பி அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. ஸி. மயில்வாகனம், திரு. ஸ்ரீநிவாசன் (டி. ஆர். ஓ) திரு. வி. முருகேசு உட்பட்ட வேறும் பலர் முகாந்திரம் மயில்வாகனம் அவர்களின் பொதுசன சேவைகளைப் பற்றி பேசினர். முகாந்திரம் மயில்வாகனம் அவர்கள் 30 வருடகாலமாக மட்டக்களப்புப் பகுதியிற் பகிரங்கவேலைப் பகுதி மேற்பார்வையாளராகப் பணியாற்றி இளைப்பாறியிருக்கின்றார். பொதுவினில் இவர் ஒரு சைவ... திருவிச் சமய அபிவிருத்தியில் ஆர்வங் காட்டி வருகின்றார்.

## அதிகார மமதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிக்கிளம்பி வேலைசெய்வது அற்புதமல்லவா? மேடையில் ஏறிநின்று மதுபானத்தை ஆதரிப்பவர்கள் சுதந்திர இலங்கையில் உண்டே என்று நினைத்து வருந்தவேண்டியிருக்கின்றது. அந்தரங்கத்திற் செய்து இலட்சையுடன் மறைந்திருந்தவர்கள் வெளிவர எப்படித் துணிந்தனரோ? கொழும்புமாநகரில் நடைபெறும் சில ஆங்கில தினசரிப் பத்திரிகைகளும் இதனை உருக்கமாக ஆதரிக்கின்றன. மதுநீக்கம் ஒருபோதும் சித்திக்கப்போவதில்லையென்பதே இப் பத்திரிகைகளின் திடமான அபிப்பிராயம். அமெரிக்காவில் மதுநீக்கம் பெரிய தோல்விபெற்றதாம். இந்தியாவிலும் அதே கதிதானாம். மதுநீக்கம் இந்தியாவில் சித்திக்கவில்லையென இப் பத்திரிகைகள் எப்படித் துணிந்து கூறுகின்றனவோ தெரியவில்லை. புதிதாகச் சிலதிருத்தங்கள் ஏற்படும்போது சிற்சில தடை தாமதங்கள், குறைகுற்றங்கள் என்பன ஏற்படுவது சகசமே. இதைக்கண்டு இந்தியாவில் அரசினர் மதுநீக்க முயற்சியைக் கைவிடப்போவதில்லை. மதுநீக்கம் கையாளப்பட்டமையால் இந்தியாவில் ஏழை மக்கள் அடைந்த பெரு நன்மைகள் பல. மது நீக்கம் புதிதாகக்கூடச் சில மாகாணங்களிற் கைக்கொள்ளப்பட்டுவருகின்றது. இலங்கை அரசினர் இப்பத்திரிகைகள், போலி வேடக்காரர் என்போரின் பிதற்றல்களுக்குச் செவிகொடாது இக் கொடிய செயலை ஒழிக்க வழிகாண்பது அவசியமாகும்.

### சீட்டின்றிப் பிரயாணம்

இலங்கைப் புகையிரதப் பகுதி அரசினர்க்குப் பெருநட்டத்தை வருவிக்கின்றது. ... பல மாற்றங்களையும் கொண்டுவந்தும், அவைகள் யாவும் பயனளித்ில. நட்டம் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது. சீட்டின்றிப் பிரயாணஞ் செய்வோர் தொகை பல்கிவருவதாக அரசினர் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையொன்று கூறுகின்றது. இதனால் மாத்திரம் நட்டம் வந்துவிட்டதாக நாம் முடிவு செய்துவிடவியலாது. புகையிரத ஸ்தானங்களிற் கடமையாற்றும் சிறிய பெரிய உத்தியோகத்தர்கள் யாவரும் நிதானமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்கின்றாரா என்பதுதான் கேள்வி.

## கொழும்பு விவேகானந்தசபை

கொழும்பு விவேகானந்த சபையின் வருடாந்தக் கூட்டம் இம் மாதம் 14-ம் திகதி வியாழக்கிழமை மாலை சபை மண்டபத்தில் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. ஆண்டறிக்கையும் கணக்கு விபரமும் சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர், சில திருத்தப் பிரமாணங்கள் சபையினரால் அங்கீகரிக்கப் பெற்றன. பின்னர் அடுத்தவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, காரியதரிசி: திரு. க. சிற்றம்பலம், தனாதிகாரி: திரு. ப. குமாரசுவாமி, வித்தியாலய மனேஜர்: திரு. குல. சபாநாதன், காரிய சபைத்தலைவர்: திரு. எம். கனகசபை, உதவிப்பொதுக் காரியதரிசி: திரு. எஸ். இராஜதுரை, உதவித் தனாதிகாரி: திரு க. பொன்னம்பலம், நகர்ப்புறக் காரியதரிசி: திரு. க. வைரமுத்து, நிர்வாகக்காரியதரிசி: திரு வ. பொன்னம்பலம், வித்தியாலயக் காரியதரிசி: திரு. சி. சிவப்பிரகாசம், நூல் நிலையப் பொறுப்பாளர்: திரு. வி. குணரத்தினம், அங்கத்தவக் காரியதரிசி: திரு. கெ. தர்மலிங்கம், பரீட்சைக் காரியதரிசி: திரு.எஸ்.என். சண்முகநாதன், புத்தகசாலைப் பொறுப்பாளர்: திரு.ரி. விசாகப்பெருமான், முகாமைச் சபைக்கும் நிர்வாகசபைக்கும் அங்கத்தவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதய ஊற்று

கசின்

## அத்தியாயம் 25

# நீந்தப் பழகுதல்

"கௌபீனம் தரித்தவர்கள் 'சஸ்பேன்டர்' தரித்துக்கொள்வதும், வாழைச் சரையால் அல்லது பனை ஈர்க்கால் தலைப்பட்டை போட்டிருந்தவர்கள், நவீன நாகரீகத் தொப்பிகள் அணிந்துகொள்வதும் கால வித்தியாசமாகும்." —ஈழத்துச் சோணாசலம்

மகாதேவனையும் லலிதாம்பிகையையும், சங்கரனும் பார்வதியும் நன்கு பராமரித்தனர். மகாதேவனைப் பார்க்க அவனுடைய குரு விசுவநாத சாஸ்திரிகள் வந்திருந்தார். விசுவநாத சாஸ்திரிகளும், கேணல் சுந்தரமும் ஆஸ்பத்திரி திறக்கும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டுவெளிக்'கேற்'றில் நின்றார்கள்.

விசுவநாத சாஸ்திரிகளைக் காணக் கேணல் சுந்தரத்துக்குப் பெரிதும் கோபமாக இருந்தது. போதாக்குறைக்கு ஆஸ்பத்திரிக் 'கேற்' திறபட்டதும், கேணல் சுந்தரத்தை இடித்துத் தள்ளிக்கொண்டு, விசுவநாத சாஸ்திரிகள் சென்றார். கேணல் சுந்தரம் விசுவநாத சாஸ்திரிகளின் கையைப் பிடித்துக்கொண்டு மறு கையால் கன்னத்தில் 'பளீர்' என்று அடித்தார். விசுவநாத சாஸ்திரிகளின் தலை 'கிண்' என்றது. உலகம் சுழன்றது. உணர்ச்சி ஸ்தம்பித்தது. ஒரு கணம் கழித்து 'ஈஸ்வரா' என்றார். 'ஈஸ்வரா' என்றதும், கேணல் சுந்தரத்திற்கு மேலும் கோபம் வந்து மறு கன்னத்திலும் தீட்டினார். விஸ்வநாதசாஸ்திரிகள், அதற்கும் 'ஈஸ்வரா' என்றார்.

'கள்ளப்பயலே என்னடா ஈஸ்வரா?'

'ஈஸ்வரா'

கட்டின மனைவியைத் தெருவிலே அலையவிட்ட உனக்கு என்னடா ஈஸ்வரா?

'ஈஸ்வரா'

'இப் பொழுது சேஷனை ஏவிவிட்டு மகளையும் கெடுக்கப் பார்த்தாய்; இன்றுதான் என்கையில் அகப்பட்டாய்' என்று மூன்றும் அடியுங் கொடுத்தார்.

'ஈஸ்—ஸ்—ஸ்வரா'

இதற்கிடையில் அருகில் நின்ற சனங்கள் அவர்களை விலக்கி விட்டனர். வழக்கம் போல விசுவநாத சாஸ்திரிகள் மகாதேவனைப் பார்க்கச் செல்லாமல், கேணல் சுந்தரத்தோடு பின்னே சென்றார். அடிவாங்கிக் கொண்டும் அவனுக்குப் பிறகே செல்கிறானே என்று பார்ப்பவர்களுக்கு அதிசயமாக இருந்தது.

கேணல் சுந்தரத்திற்குப் பிறகே சென்ற விசுவநாத சாஸ்திரிகள், லலிதாம்பிகையை உற்று உற்றுப்பார்த்து அழுதார். சிறு குழந்தையைப் போல் அவர் தேம்பித் தேம்பி அழுவதைக்கண்ட ஜனங்களுக்கு, அடிபெற்ற நோவினால் அழுகிறாரா? லலிதாம்பாளின் காயத்தைக் கண்டு அழுகிறாரா என்பது புரியவில்லை. கேணல் சுந்தரத்தின் மனமும் ஆறிவிட்டது. ஆஸ்பத்திரிக்குள், நோயாளிகளுக்கு மத்தியில் வைத்து ஒரு கலகத்தை உண்டுபண்ண அவர் விரும்பவுமில்லை.

தனது மகள்தான், லலிதாம்பிகை என்பதை உணர்ந்ததும், அவர் தான் இழந்துவிட்ட ஏதோ ஒன்றைப் பெற்றுவிட்டது போன்ற உணர்ச்சியும், அவளின் ஆபத்தான நிலையைக் கண்டு தோன்றிய சோக உணர்ச்சியும் சேர்ந்து ஒரே கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கியது.

லலிதாம்பிகை சிறுவயதாக இருக்கும் பொழுது தனது மனைவி, தமது ஆசாரத்திற்கு ஒத்துவராததைக் கண்ட விசுவநாத சாஸ்திரிகள், அவர்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். தாயும், மகளும் நிர்க்கதியாயினர். அவர்களை கேணல் சுந்தரம், லலிதாம்பிகையின் தாயின் தம்பி, காப்பாற்றினான். சிலவருஷங்களின் பின் லலிதாம்பிகையின் தாய் காலமாகிவிட்டாள். லலிதாம்பிகையைக் கேணல் சுந்தரம் வளர்த்து வந்தார்.

விசுவநாதசாஸ்திரிகள் ஆன்மார்த்தத் துறையில் ஈடுபட்டுத் தமது மகளையும், மனைவியையும் மறக்க முயன்றார். சில சமயங்களில், தமது மகளைப்பார்க்க அவர் விழைந்த போதிலும், அவள் இருக்குமிடம் சரியாகத் தெரியாததாலும், தமது மைத்துனனுக்குப் பயந்தும், அவளைத் தேட அவர் முற்படவில்லை.

இப்பொழுது தமது மகளைக்கண்டதும், தமது பிற்காலத்திலாவது, தமது மகளைக் கண்டுவிட்டதுபற்றி அவர் மிகவும் சந்தோஷமடைந்தார். மகாதேவனையும், லலிதாவையும் விசுவநாதசாஸ்திரிகள் நின்று கவனித்து அவர்களுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்துவந்தார்.

லலிதாம்பிகையே முதலில் எழும்பி நடக்கக்கூடிய சக்தியைப்பெற்றாள். லலிதாம்பிகை மெல்ல மெல்ல வந்து மகாதேவனைப் பார்த்தாள். அவளைக் கண்டதும் விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டான். மகாதேவனும் அழுதான். அவர்கள் தங்கள் அழுகையை மாற்றத் தாங்களே முயன்றும் அவர்களால் முடியவில்லை. அவர்களின் அழுகை ஒரு நோய்போல அவர்களை அறியாமலே இருந்தது. அதனை ஒருவராலும் மாற்ற முடியவில்லை.

விசுவநாதசாஸ்திரிகள்வந்து 'நீங்கள் ஒரு அவயவக் குறைவுமின்றி உயிர் தப்பினது ஈஸ்வர கடாட்சம். எங்கும் நிறைந்த பரம்பொருளை, திருவருளை, நினைந்து நீங்கள் களிகூரவேண்டும். நீங்கள் அழக்கூடாது. சில நாட்களுக்குள் உங்களுக்கு இக்காயங்கள் எல்லாம் ஆறிவிடும். பின் இச் சம்பவங்களையே மறந்துவிடுவீர்கள். இப்பொழுது நீங்கள் கவலையின்றிப் படுக்கவேண்டும்'. என்று கூறி, 'உங்கள் இருவருக்கும் மணம் முடித்து வைப்பது எனது பொறுப்பு' என்று கூறினர்.

இவ் வார்த்தைகளைக்கேட்ட மகாதேவனினதும், லலிதாம்பிகையினதும் உள்ளங்கள் பெரிதும் ஆறுதலடைந்தன. மணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் அவர்கள் உள்ளத்தில் ஒரு தளிர் தோன்றியது. அவர்கள் இதயத்தில் பழைய படி ஓர் ஊற்றுக் கிளம்பியது.

சமீபத்தில் எனது விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காகக் கீரிமலைக்குச் சென்றிருந்தேன். அங்கே நான் அதிகாலை நாலுமணிக்கு எழுந்து சென்று கடற்கரையில் இருப்பது வழக்கம். அந்த நேரத்தில் கீரிமலைக் குளத்தில் யாரோ நீந்துகின்ற சத்தம் கேட்கும். நான் தவறாமல் யாரோ நீந்துவதைக் கேட்டயான், யார் அவர்கள் என்று அருகிற் சென்று பார்த்தேன். ஒருவருக்கு இன்னொருவர் நீந்தப் பழக்குகிற பயிற்சி அங்கே நடந்துகொண்டிருந்தது. நீந்தப் பழகுகிற மனிதனின் அரையில் பழக்குகிற மனிதன் பிடித்துக்கொள்ள, பழகுகிற மனிதன் காலையும் கையையும் நீரில் அடித்து நீந்தப்பழகினான். நீந்தப் பழகிய மனிதன் அரையில் சஸ்பென்டர் தரித்திருந்தான். அதில் பிடித்துத் தூக்கிக்கொண்டே நீந்தப் பழக்கப்பட்டது. ஒருத்தர்பார்த்ததில் நீந்தப் பழகுவது மனிதன் அல்ல ஒரு மனுஷி என்பதும், பழக்குவது மனிதன் என்பதும் எனக்குப் புலனாயிற்று. இளந் தம்பதிகளின் ஜலக்கிரீடையைப் பார்ப்பது நாகரீகமல்ல என்பதை மறந்து நீண்ட நேரம் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டேன். என்னை அறியாமல் சிரித்தும்விட்டேன். அவர்கள் வெட்கப்பட்டோ? அன்றேல் தங்கள் ஜலக்கிரீடை முடிந்தோ வெளியில் வந்தார்கள்.

மனிதன்பெயர் மகாதேவன்; மனுஷியின்பெயர் லலிதாம்பிகை. அவர்களுடன்பேசிய பொழுதுதான் இத்தனைகாலமும் தொடர்ந்து எழுதிவந்த இந்தக்கதை எனக்குத் தெரிய வந்தது.

"தண்ணீருக்குள் இறங்கித்தான் நீந்தப்பழகலாம்.
வாழ்க்கையில் இறங்கித்தான் காதலை யறியலாம்.
தண்ணீர் நிலத்தில் ஊறுவது; காதல் இதயத்தில் ஊறுவது."

* * *

லலிதாம்பிகையின் மாமனார் கேணல் சுந்தரம் தேடிவைத்தசொத்தும், மகாதேவனுக்கும் லலிதாம்பிகைக்கும் பஸ் கொம்பனி கொடுத்த நஷ்டஈடும் சேர்ந்து ஒரு அரைக் கோடி ரூபாவுக்குமேல் மகாதேவனுக்குக் கிடைத்தது. இப் பணத்தை மூலதனமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட 'லலிதா மில்ஸ் பேப்பர் பாக்டரி' மாங்குளப் பிரதேசம் முழுவதும் வானளாவும் புகைக்குழாய்களால் மேகமண்டலமன்ன புகையைப் பரப்பிக்கொண்டு இன்று விளங்குகின்றது.

முற்றும்.

காங்கேசன்துறையில் ~~~
திறமான ஜேர்மன் சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—
நியூகோ ட்றேடிங் கம்பனி
காங்கேசன்துறை
தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் நம்பர் 25
[4307]

## வானிசை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தானே என்று சொல்லக் கூடியதாயிருந்தது.

இவருக்கு நல்ல ஞானமிருக்கிறபடியால் இவருடைய குறைபாடு ஒன்றையும் சொல்லவேண்டும். அதாவது பாவத்தில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

18-6-51

திரு. கே. கே. கிருஷ்ணபிள்ளை

கச்சேரி தொடங்கி முடியும்வரை இவர் சுருதி விலகாமல் நன்றாக உழைத்துப் பாடினார். 'ராமா இகநன்னு' என்ற பாடலை நன்றாகப் பாடியிருந்தபோதும் அதைக் கடைசியாகப் பாடியிருக்க வேண்டும். சரசாங்கிஇராகத்தின் முக்கிய சஞ்சாரத்தைக் காட்டி உடனே பாடலைப் பாடினார். பாட்டிற் சொற்பிழைகள் தென்பட்டன. சண்முகப்பிரியாவில் 'அருட்பெருவள்ளலை'ப் பாடினார். அருமையான இப் பாடலை நன்றாகப் பாவம் ததும்பப் பாடினார். ஒரே ஒரு தரம் சாரீரம் மக்கர் பண்ணித் திண்டாடச் செய்தது. இவர் சாரீரத்தைக் குளிர்ச்சியாக்க முயலவேண்டும்.

திரு. கே. எம். ராஜா

புல்லாங்குழல் — இவர் 'வாதாபி'யைத் தடபுடலாக வாசித்தார். இக்கச்சேரியிற் பக்கவாத்தியங்களின் கோளாறு இருந்தது.

19-6-51

திரு. எம். கணேசன்

கிளாரினெட் முன்னுக்கு நன்றாக இருந்தது. போகப் போக உற்சாகம் குறைந்தது. மிருதங்கம் தகரத்தில் அடித்தாற்போலிருந்தது. வயலின்காரர் கண்டபடி சங்கதிகளைப் போட்டுக் கற்பனைகளைக் குழப்பினார். பாடல்களின் சங்கதிகளை ஏற்கனவே அறிந்தாலன்றி 'போ' போன போக்கிலும் விரல் போன போக்கிலும் வாசித்தல் பக்கவாத்தியமாகாது.

19-6-51

நாடக அரங்கம்

'பாஞ்சாலி சபதம்' இரவு 9. மணி தொடக்கம் நடைபெற்றது. இந்நாடகம் இன்னுமொருமுறை நடந்தாலும் மிக நன்றாயிருக்கும். நடிகர்கள் உணர்ச்சிததும்ப நடித்தார்கள். வசனம்: திரு. ஏ. குருசுவாமி.

யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா ,34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணக் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.
தினசரிப் பற்று வரவு:
கச்சிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்:
நகைகள் அடைவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (அடைவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை எம்மூலம் அறிந்து கொள்ளலாம்
S. கனகசபை
பிரும்வர்
[4314]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக விவகாரம்

இந்தியாவின் எல்லையோரத்தில் என்றே ஒருநாள் சீன இராணுவம் நிறுத்தப்பட்டால், அதைக்கண்டு ஆச்சரியப்படவேண்டயதில்லை.

# தீபேத் உடன்படிக்கை

## சீனத்தின் நோக்கம் என்ன?

**எல்லாத் தேசங்களும்** சுதந்திரமாக இருக்கவேண்டும் என்பது ருஷியாவின் விருப்பம். இவ்வாறு, விஷன்ஸ்கி ஐ. நா. சபையில் கூறினார். சீனக் கொம்யூனிஸ்ட் தலைவர் மா-சே-துங் கூட இப்படித்தான் சொல்லிக்கொண்டு வருகிறார். ஆனால் நடைமுறையில் இதற்கு நேர் விரோதம் தான் காணப்படுகிறது.

தீபேத்தின் விஷயத்தில் ஆதிமுதல் சீன நடந்துகொண்ட முறை இந்த உண்மையை வெளிப்படுத்துகிறது. தீபேத்தின் மேலதிகாரம் உடன்படிக்கையின்படி சீனத்துக்கு வந்துவிட்டது. அரசியற் பரிபாலன முறையில் தீபேத்தைச் சீனம் விழுங்கிவிட்டதென்பதாகும். உடன்படிக்கையின்படி சீனத்தின் ஒரு மாகாணமாக தீபேத் இயங்கும். இந்த தீபேத்திற்குச் சுயாட்சி வழங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. பெயரளவில் சுயாட்சி என்று கூறினால் தவறில்லை. செய்கையில் சுதந்திரமிருக்க முடியாதென்பது தெளிவு. இந்த உடன்படிக்கையைச் செய்து கொள்ளப் புறப்பட்ட தீபேத் தூதுக்கோஷ்டி, தீபேத்திலிருந்து புறப்பட்டது முதல், பரபரப்பான செய்திகள் வந்த வண்ணமாகவே இருந்தன. சீனத்துருப்புகள் தீபேத்திற்குள் பிரவேசித்துவிட்டதென்பதை ஆதரித்தும் மறுத்தும் பல செய்திகள் பத்திரிகைகளில் காணப்பட்டன. இந்த அவல நிலைக்கு என்ன காரணம் என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

**இந்தியா—சீனம்**

இந்தியாவுக்கும், சீனத்துக்கும் நடுவில் தீபேத் இருக்கிறது. தீபேத் பலகாலமாகவே சீனத்துடன் அரசியல் உறவு கொண்டிருந்தது. ஆனால் சீனத்துக்குத் தீபேத் கட்டுப்பட்டதென்று கூறுவதற்குச் சரியான காரணமும் இல்லை. தீபேத் சுயேச்சையான நாடு என்றும் சொல்ல முடியாத நிலையில் இருந்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இருக்கும் வரையில், சீனத்தில் சியாங் ஆட்சி இருந்தது. இந்தியா விடுதலை அடைந்தது. சீனத்திலும் கொம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டது. இந்தியாவிற் கொம்யூனிசம் பரவவேண்டுமானல், தீபேத் சீனத்தின் முழு ஆதிக்கத்தில் வரவேண்டும் என்பது மொஸ்கோவின் திட்டம். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைச் சீனமும் மொஸ்கோவும் விரும்பவில்லை. ஆகையால் உஷாராக இருக்கவேண்டும் என்ற கருத்து மொஸ்கோவிலே தோன்றியது. இந்தக் கருத்தை நிலையுறச் செய்யச் சீனம் உதவியாக இருந்தது. ஆகையால் தீபேத்தின் மீது சீனு நாட்டம்கொண்டது. முதலில் துருப்புகளை அனுப்பியது. பிறகு ஒரு சமாதானம் உருவாகியது. கடைசியில் தலைநகரம்வரையிற் சீனத் துருப்புகள் வந்துவிட்டதென்ற செய்தி எட்டியது. இந்த சமயத்தில் தீபேத் நல்லெண்ணத் தூதுக்கோஷ்டி சீனத்துக்குச் சென்று கொண்டு இருந்தது. சமாதானப் பேச்சு ஒருபுறமும், துருப்புகளின் முன்னேற்றம் மறுபுறமுமாக இப்பொழுது தீபேத் உடன்படிக்கை உருவாகி இருக்கிறது.

**தலாய் லாமா**

தீபேத்தின் தலைவர் தலாய் லாமா என்பவர். இவருடைய

○ தராசு ○

ஆட்சிக்குப் போட்டியாகப் பஞ்சன் லாமா என்பவரைச் சீனம் தூண்டியது. பஞ்சன் லாமாவின் கோரிக்கை நியாயமானதென்று சீனம் கூறியது. ஆனால் தீபேத் மக்களிற் பெரும்பாலோர் தலாய் லாமாவைத்தான் விரும்பினார்கள். திடீரென்று தோன்றிய படையெடுப்பு அமைதியாக இருந்த மக்களின் மனதில் ஒருவிதமான கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டது. தீபேத்திற்குள் குழப்பம் ஏற்பட்டது. உள்நாட்டில் குழப்பம் ஏற்படுவதை தலாய் லாமா விரும்பவில்லை. அண்டை நாடான இந்தியா இந்த வியவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. எப்படியும் சீனத்திற்குப் பணிந்துபோகவேண்டிய தவிர்க்கமுடியாமல் ஆயிற்று. இதன் முடிவுதான் இந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் மூலம் தீபேத்தின் வர்த்தகத்தில் சீனத்திற்குத் தக்க லாபம் ஏற்படும். இந்த உண்மையை காலகடவில் தான் உணர்ந்து கொள்ள முடியும்.

**பஞ்சன் லாமா**

உற்ற சமயத்தில் உதவிய பஞ்சன் லாமாவைச் சீனம் கைவிட விரும்பவில்லை. அதனல் பஞ்சன் லாமா மதத் தலைவராக்கப்பட்டார். இவருக்குச் சாதகமாகவே மத விஷயத்தில் சீனம் தலையிடாது என்ற வாசகமும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. மதாபிமானத்தை அறவே வெறுக்கும் கொம்யூனிசக்கொள்கை, எப்படியோ இந்தப் பஞ்சன் லாமாவிற்காக மத சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டது. இந்த உடன்படிக்கையின் மூலம் சீன தேசம், தன் துருப்புகளைத் தீபேதத்திற்குள் வைத்துக்கொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட இராணுவ பலத்தின் மூலம் தீபேத்தில் சீனம் ஆட்சி செலுத்தமுடியும் என்பது தெளிவாகிறது. தீபேத்தில் இப்பொழுது இருக்கும் தீபேத இராணுவமானது, இனிச் சீன இராணுவத்தின் ஒருபகுதியாகத்தான் இருக்கமுடியும். இதனல் சுயேச்சையான இராணுவம் வைத்துக்கொள்ளத் தீபேத்திற்கு உரிமையில்லாது போய் விட்டது. இந்தக்கூட்டுஇராணுவத்தின் நிர்வாகம், தீபேத், சீனு ஆகிய இரண்டுதேச பிரதிநிதிகளும் கலந்த ஒரு இராணுவ அதிகாரத்

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

# கீழ்க்கரைக் கோயில்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைய இருப்புப் பாதையும் வண்டிப்பாதையும் உண்டு. பொலன்னறுவை என்ற பண்டை ஊரிலிருந்து கிழக்கே சென்று வாழைச்சேனையண்டை தெற்கே திரும்பிச் சென்றால் அடுத்தநிலையம் சிற்றாண்டிகுடி ஆகும். இக் கோவில்த் திருவிழாக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. கீழ்க்கரை நாட்டு மக்கள் மிகுதியாக இங்கே வழிபாடு செய்ய வருகிறார்கள்.

**தென்பால் நிலையம்:**

மட்டக்களப்பை விட்டுத் தெற்கே கடற்கரையோரமாகச் சென்றால் அக் கடற்கரையின்மேல் மணல் தரையில் அருமையாக அமைந்துள்ளது திருக் கோயில் என்பது. இது அமைந்திருக்கும் நிலையம் தூய்மையான நெய்தல் நிலம் ஆகும். கோவில் தொன்மை வாய்ந்தது. முருகக் கடவுள் மயில்மீது எழுந்தருளி யிருக்கின்றார். அந்த உருவக் காட்சி மிக அருமையானது. தற்போது கோயில் பாலாலயமாக வைக்கப்பட்டுள்ளது. திருப்பணி தொடங்கி நிறுத்தப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மீண்டும் தொடங்கப்பெறக்கூடும். இடம் மிக அமைதியானது. மக்கள் தெய்வக் கொள்கை நிரம்பப் பெற்றவர்கள். இவ்வழிச் செல்லும் மக்கள் எல்லாம் இத் திருக்கோயிலைத் தரிசிக்காமல் செல்வதில்லை. வேறொரு அடைமொழியும் இல்லாமல் திருக் கோயில் என்ற தனித் தமிழ்ச் சொல்லால் குறிக்கப்படுவதே இத் தலத்தின் பெருமையைக் காட்டுகின்றது.

**ஏனைய கோயில்கள்:**

இவைகளையன்றிக் கீழ்க்கரைநாட்டில் அம்மன் கோயில்கள் பலவும் உண்டு என அறியவேண்டும். அவைகளில் சிறப்பாகக் காண்பது **கண்ணகியம்மன்** கோயில். விபுலானந்த அடிகளின் பிறப்பு இடமாகிய காரைதீவில் பாதையை ஒட்டி ஒரு கண்ணகியம்மன் கோயில் இருக்கிறது. அதனையுங்கண்டு வந்தேன். தமிழ் மக்கள் இருக்கும் இடங்கள் பலவற்றிலும் கண்ணகி கோயில்கள் இருக்கின்றன. தென்தமிழ் நாட்டில் கண்ணகி என்ற பெயரால் கோயில்கள் இருக்கக் காணேம் ஆனல் ஈழநாட்டில் இன்றைக்கும் கண்ணகி கோயில்கள் இருந்தால் அம்மக்களின் பண்டைப் பெருமை பற்றிய எண்ணம் எத்துணை என்று கூறவும் வேண்டுமா? தொன்மையான முருகக்கடவுள் ன்பனிதானமாகிய கதிர்காமத்திலும் ஒரு கண்ணகி கோயில் உண்டென்று அறியவேண்டும். இலங்கை அரசன் கயவாகு என்பான் 18 நூற்றாண்டுகளின்போது கண்ணகிச் சிலையை ஈழ நாட்டில் நாட்டினன். பிறகு அந்தத் தெய்வ வழிபாடு ஈழ நாடு முழுவதும் பரவிற்றுப் போலும். அனல்தான் கீழ்க்கரை நாட்டிலும் கண்ணகி கோயில்கள் உள்ளன. இப்படிப்பட்ட நாட்டின் பண்பாட்டைத் தமிழ் மக்கள் உணரவேண்டாமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பான மருமக்களே.

கீழ்ப்பிரிவிலுள்ள எனது மருமக்களுக்குக் கதைகள் கேட்கவும் வாசிக்கவும் மிக விருப்பமாக இருக்கின்றது. இன்று கிடைத்த கடிதம் ஒன்றிலே கொழும்பிலுள்ள மருமகன் ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்.

"......மாமா, 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்ற பழமொழியை விளக்குவதற்கு ஒரு கதை சொல்லுங்கள் பார்க்கலாம். எனக்குக் கதைகள் என்றால் அதிக ஆசை........."

சரி, இதோ ஒருகதை அப்பழமொழியை விளக்குவதற்கு எழுதுகிறேன்.

பட்டியிலிருந்து ஒரு ஓநாய் ஓர் ஆட்டுக்குட்டியைத் திருடி வாயிற் கௌவிக்கொண்டு சென்றது. வழியில் ஒரு சிங்கம் அதன் வாயிலிருந்து அந்த ஆட்டுக்குட்டியைப் பிடுங்கிக் கொண்டது. ஓநாய் மிகுந்த கோபத்துடன், "இந்த ஆட்டுக்குட்டியை எப்படி நீ பிடுங்கிக் கொள்ளலாம்? உனக்கு இந்த ஆட்டுக்குட்டி எப்படிச் சொந்தமாகும்?" என்று கேட்டது. சிங்கம் நகைத்து, "நன்று! இந்த ஆட்டுக்குட்டி உன்னுடையதா? நீ எவ்விடத்தில் வாங்கினாய்? இல்லாவிட்டால் எந்த நண்பன் உன்னுடைய உதார குணத்திற்காக இந்த ஆட்டுக்குட்டியைப் பரிசளித்தான்?" என்று சொல்லிச் சென்றது.

கேசரிமாமா

## மாமா பதில்

**மே.429. கு. பத்மாவதி:** உமது பூஞ்சோலை மணம் வீசுகின்றது. புத்தகங்களின் விலை எனக்குத் தெரியாது. புத்தகம் விற்பவர்களுக்கு எழுதி அறிந்துகொள்ளவும்.

**மே.497. கே. சாமித்தம்பி:** ஆம், மதுவரக்கனை நாட்டினின்றும் தொலைக்கவேண்டும். கட்டுரை கிடைத்தது.

**மே.403. ம. த. லோறன்ஸ்:** உமது கட்டுரைகளையும் கடிதங்களையும் படித்துமகிழ்ச்சியடைகின்றேன். நீர் **மகிட்சி** என்று எழுதுகின்றீர். பிழையைக் கவனிக்கவும். **பாலர் பகுதி**யில் நீர் மிகுந்த கரிசனை எடுத்து வருகின்றீர். மீண்டும் **மகிழ்ச்சி.** சிவானந்த வித்தியாலயம் வாழ்க.

**மே.483. செ. துரைரத்தினம்:** இப்போது உமது இலக்கம் தெரிந்ததா? நீர் தூரதேசத்திலிருந்து எப்போது ஊர் திரும்பினீர்?

**மே.503. சி. இராமச்சந்திரம்:** வண்டியின் சுயசரிதை மிக நன்று.

**மே.499.கு. ஜெகதீஸ்வரன்:** கடிதம் படித்து மகிழ்ந்தேன்.

**கீ. 505. க. சுகுணா:** உமது கடிதம் கிடைத்தது. நன்றி கூறுகின்றேன்.

## இலக்கியச் செல்வம் 11

# திருக்குறள் - துறவறவியல்

– – கே. எஸ். கிருஷ்ணன் – –

துறவறவியல் விரதம் ஞானம் என்ற இரண்டு பிரிவுகளையுடையது: விரதம் என்ற பிரிவில் துறவிகள் கைக்கொள்ள வேண்டிய அறம் யாது, ஒழிக்கவேண்டிய பாவம் யாது என்பன போன்ற விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. ஞானம் என்ற பிரிவில் மெய்யுணர்வின் தோற்றத்தையும் அதனால் பெறப்படும் பேராவியற்கையையும் எடுத்துக் கூறுகிறார்.

இல்லறத்திற்கு அன்புடைமை இன்றியமையாத பண்பாயிருப்பது போல், துறவறத்திற்கு அருளுடைமை பண்பாக அமைந்திருக்கின்றது. துறவி அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களுக்கெல்லாம் மூலகாரணமாயிருப்பதும், அவ்விரதங்களை இடையூறின்றி முடிப்பதற்கு உதவியளிப்பதும், அவன் உயிர்கள் மேல் செலுத்தும் கருணைதான். அருளுடையாரிடத்தில் புலால்மறுத்தல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை முதலிய நற்குண நற்செய்கைகள் எப்போதும் நிலைத்திருக்கும். ஆதலால் அருளுடைமையைத் துறவறத்தின் சிறந்த பண்பாகக் கருதுகிறார்.

துறவறவியலில் உள்ள குறள் மணிகள் எல்லாம் அருளுடைமை யென்னும் பொனனிழையால் இணைக்கப்பட்டிருக்கின்றன. அருளுடையார் எல்லாம் உடையார் ஆனால், 'அருளற்றார் அற்றார், மற்று ஆதல் அரிது'.

அருளை மறக்க நினைப்போருக்குத் திருவள்ளுவர் எவ்வளவு நயமாக உபதேசிக்கிறார் என்று பாருங்கள்:–

'வலியார்முன் தன்னை நினைக்க, தான்தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து'.

அருள் பிறந்தவழி, ஒருவன் தீரனாக இருப்பன். அவன் அஞ்சவேண்டியதொன்றுமில்லை.–

'மன்னுயி ரோம்பி அருளாள் வார்க்கு இல்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை'

இன்னா செய்யாமை யென்ற அதிகாரத்தில் சுயநலங்கருதியேனும் அருளுடைமையைக் கடைப்பிடிக்க வேண்டாமா என்று நகைச்சுவை ததும்பக் கேட்கிறார்.

'தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ,
மன்னுயிர்க் கின்னா செயல்'.

அருளுடைமைக்கு நிகராக வேண்டற்பாலது மாசற்ற மனம். அதைப் பாயிரவியலிலேயே,

'மனத்துக்கண் மாசில னாதல்
அனைத்தறன்
ஆகுல நீர பிற'

என்ற குறளால் குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்.

மாசற்ற மனத்தைக் கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் மீண்டும் நினைவுறுத்துகிறார்:–

'மனத்தது மாசாக
மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்'

இங்கு மாசு என்பது அழுக்காறு, அவா, வெகுளி, மயக்கம், வெஃகுதல் முதலான உட்பகைகளின் கூட்டம்.

மாசு நீங்காத மனதில் நகையும் உவகையும்காணக்கிடையா என்ற உண்மையை 'வெகுளாமை' என்னும் அதிகாரத்தில் எடுத்துக் காட்டுகிறார்:–

'நகையும் உவகையும்
கொல்லும் சினத்தில்
பகையும் உளவோ பிற'

மாசற்ற மனமும் அருள் நிறைந்த உள்ளமும் உடைய பெரியார் மெய்யுணர்வு என்ற பயனை எய்துவர்.

ஞானம் என்ற பிரிவில் நான்கு அதிகாரங்கள் இருக்கின்றன. அவற்றுள் நிலையாமை யென்னும் அதிகாரத்தில் செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகிய இரண்டும் கூறப்பட்டுள்ளன. செல்வம் உள்ளபோதே அறத்தைச் செய்யவேண்டும். ஏனெனில்,

'அற்கா வியல்பிற்றுச் செல்வம், அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்'

யாக்கை நிலையாமையைப்பற்றிப் பாயிரவியலிலேயே,

'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க, மற்றது
பொன்றுங்கால்
பொன்றாத் துணை'

என்ற குறளில் குறிப்பிட்டிருக்கின்றார். இங்கு நிலையாமையென்ற அதிகாரத்தில், காலமானது நாளெனப் படும் வாளால் உயிரினது ஆயுளை வெட்டிக் கொண்டிருக்கின்றது என்று நினைவுறுத்துகின்றார். ஆகவே,

'நெருநல் உளன்ஒருவன்
இன்றில்லை யென்னும்
பெருமை புடைத்திவ் வுலகு'

என்று இம் மண்ணுலகத்தியற்கையை விளக்குகிறார். உலகியற்கை இவ்வாறாக, இவ்வுலகத்தில்,

'ஒருபொழுதும் வாழ்வது
அறியார் கருதுப
கோடியு மல்ல பல'

ஈதென்ன விந்தை யென்று ஆச்சரியப்படுகிறார்.

நிலையாமையை உணர்ந்து ஒருவன் 'யான் எனது என்னும் செருக்கறுப்பான். அத்தன்மையைத் துறவு என்ற அதிகாரத்தில் விதந்தோதுகிறார்.

நிலையாமையை யுணர்ந்து துறவை மேற்கொண்ட மாசறு காட்சியவர்க்கு 'இருள் நீங்கி இன்பம் பயக்கும்' என்ற உறுதியை அளிக்கிறார் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்.

மெய்யுணர்வு தோன்றியவாறே, இருள் மூட்டும் காம வெகுளிமயக்கங்களான மூம்மலமும் தேயும். ஆனாலும் அவற்றிற்கு ஊற்றாக இருக்கும் அவாவை மெய்யுணர்வினால் ஒழிப்பதற்கு இடைவிடாமல் முயல வேண்டும் என்பதை அவாவறுத்தல் என்ற அதிகாரத்தில் போதிக்கிறார்.

அவாவறுத்தலால் எய்தும் பயன் யாதென்றதை

'ஆரா வியற்கை யவாநீப்பின்
அந்நிலையே
பேரா இயற்கை தரும்.'

என்ற குறளால் அறிவுறுத்துகிறார்.

## தலைவிதிவசம்

**மே. 429. கு. பத்மாவதி**

அன்று வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. கையில் குடையேந்திய பிரபு ஒருவர் எங்கிருந்தோ மிகவும் களைத்துப்போய் வந்தார். அவர் வரும் வழியில் ஒரு மனிதன் தொகையான தேங்காய்களை ஒருசாக்கிற் போட்டுச் சுமந்து கொண்டு வந்தான். அவனும் அதிகதூரம் நடந்திருந்தமையால் மிகவும் களைப்புற்றவனாகத் தோன்றினான். பிரபு அவனைப் பார்த்து, என் இவ்வளவு தொகையான தேங்காய்களைச் சுமந்து செல்கின்றாய்? அதனால் நன்றாய் களைத்துவிட்டாயே' என்றார். அதற்கு அவன், 'என்னசெய்யலாம் தலைவிதிவசம்' ஆயிற்றே என்றான். பிரபு, 'தலைவிதிவசமா உன்னை இப்படிக்கஷ்டப்படுத்துகின்றது? ஆ பாவம்!' என்றார்.

இப்படியாக இவர்கள் பேசிக்கொண்டு சென்றனர். வழியில் பிரபுவை அறிந்த ஒருவர் 'என்னஐயா, அம்மனிதனுடன் ஏதோ அதிகமாகப் பேசிக்கொண்டு வருகிறீர்கள். அப்படி என்னபுதினம்?' என்றார். அதற்குப் பிரபு, 'அப்படி ஒருபுதினமுமில்லை. நான் இவனை ஏன் இவ்வளவு பாரமுள்ள தேங்காய்களைச் சுமந்து வருகின்றாய் என்று கேட்டேன். அதற்கு அவன் தன் தலைவிதிவசமாயிற்றே என்றான். அதுதான் நான் அவனின் தலைவிதியைப்பற்றி அனுதாபப்பட்டுக்கொண்டு வருகின்றேன்' என்றான். தேங்காய் கொண்டு வந்தவன், 'ஐயா நான் கூறியதை இவர் மாறுதலாக விளங்கிவிட்டார். நான்கூறியது இது என் தலைவிதிவசம்என்று. அதாவது எனது தலைவியிலுடைய திவசம் (திதி) நாளைக்கு. அதற்காகக்கொண்டு செல்கின்றேன்' என்றான்.

இதைக்கேட்டுக்கொண்டு நின்றவர்வயிறுவெடிக்கச்சிரித்தார். பிரபு தனது புத்தியீனத்தை நினைத்து வெட்கப்பட்டுக்கொண்டு வீடுசென்றார்.

## கண்டு பிடியுங்கள்

**கீ.37. சி. கனகரத்தினம்**

அன்பர்களே, பின்வரும் வசனங்களிற் சில ஊர்களினதும் தேசங்களினதும் பெயர்கள் மறைந்திருக்கின்றன. அவைகளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

1. அந்த வீரன் குண்டுபட்டுக் கோட்டை வசலில் இறந்தான்.
2. அந்தக் கொம்பர் மாங்காய்களை நிறைய உடையதாக இருந்தது.
3. அந்தக் கொவ்வம்பழங்களை அக்கிளி நொச்சிமரத்தடியில் வைத்திருந்தது.
4. 'னார்' என்பதற்கு இராமன் 'ணர்' என்று பிழையாக எழுதினான்.
5. நடுக்காட்டில் சிங்கம் காணப்பட்டது.
6. கோபாலன் பிரப்பம்பாய் வாங்கினான்.
7. இராமதுரை தனது கோடை விடுமுறையைக்கழிக்கும் பொருட்டுத் தன் மாமனார் வீட்டுக்குச் சென்றான்.

**விடைகள்:**

1. பட்டுக்கோட்டை 2. பர்மா 3. கிளிநொச்சி 4. மன்னார். 5. டில்லி 6. பம்பாய் 7. மதுரை.

## மருமகன் கடிதம்

அன்புள்ள கேசரிமாமா அவர்களுக்கு:

வணக்கம். எனக்குத் தங்களையும் ஈழகேசரிக் காரியாலயத்தையும் பார்க்க ஆவலாய் இருக்கின்றது. இலங்கையிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளில் ஈழகேசரியே சிறந்து விளங்குகின்றது. அதில் உள்ள விஷயங்கள் மிகவும் பயன்படக் கூடியதாய் இருக்கின்றன. ஈழகேசரியைப் பற்றிப் புகழாதாரில்லை. இதைக் கேட்க எனக்கு உண்டாகும் சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

க. சிவசுப்பிரமணியம்
(கீ. 378)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
18-6-51

## உடற் பயிற்சி

**கீ.37. சி கனகரத்தினம்**

உடல் நலம் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது. உடம்பைப் பெற்றமக்கள் அதைப் பாதுகாக்க வேண்டும்.

நோய் வராது தடுப்பவன் அறிஞன், வந்து தடுப்பவன் மனிதன், வந்தும்தடுக்காதவன் பிணம், என்று சொல்லுகின்றனர். நோய் வராமல் தடுப்பதற்கு நாம் உண்ணும் உணவிலும், உடலின் உழைப்பிலும் கருத்தைச் செலுத்தவேண்டியது அவசியம். உணவு உடலுக்கு தேவை என்பது யாரும் அறிந்த ஒன்று. ஆனால், உணவுண்ணும் உடலுக்கு உழைப்புத் தேவை. கிராமத்தில் வாழும் மக்கள் உணவுக்காக உழைக்க வேண்டிய நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வேண்டிய அளவு உண்கிறார்கள்.

பொருட்செல்வம்தேட முயற்சி தேவை. சுகம் என்னுமசெல்வத்தை தேடப்பயிற்சிதேவை. உடற்பயிற்சி இன்றி உடல்நலத்தைப் பெறமுடியாது. உடல் நலம் பெறாத மக்களால் நாட்டிற்கோ, மொழிக்கோ, சமூகத்திற்கோ ஒரு நன்மையும் இல்லை.

## புதிய மருமக்கள்

**கீ.511. சோ. கனகராசா,** சிமேந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை.

**கீ.512. பொ. சிவகாமசுந்தரி,** சரசாலை, சாவகச்சேரி.

**மே.513. க. கனகம்மா,** ஆர். கே. எம். பாடசாலை, தம்பலவத்தை, மண்டூர்.

ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..........

விலாசம்: ..........

..........

..........

பிறந்ததிகதி: ..........

..........

தந்தை தாயார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாற்றுவார்க்குத் துணை

கரும்பல்ல நெல்லென்னக் கழுகல்லக் கரும்பென்னத் தொழில பலிதமான ஒருகாலம் முன்னிருந்தது. பயிர்த்தொழில் செய்வார் ஆறிலொரு பாகம் அரசர்க்கு நல்கியமை திருவள்ளுவர் திருவாக்கால அறிகின்றோம். ஒவ்வொருநாடும் சிறந்த தொழிலாளர்களைப் பெற்றே முன்னேற்றமடைந்தது. ஒரு யப்பான் ஒரு ஜேர்மன் ஒற்றுமை முயற்சிகளினுலே மதிக்கவந்தது. பின்பு வீழ்வதுபற்றிக் கவலை இல்லை. எதற்கும் முயற்சி வேண்டும். கைத்தொழிற்பாடசாலைகள் பல தோன்றவேண்டும். ஒருவர் இருவர் விசித்திரமான செயலாளர் என்ற பேச்சுப் போதாது. கல்வியென்னும் வீடுதோறும் பிரகஸ்பதி மூர்த்திகள் வந்திருக்கின்றார் எண்ணு எண்ணக்கூடிய அறிஞர் பெருகவேண்டும்.

ஒவ்வோர் பெண்மணிகளும் அறிவால் கலைக்கிழத்தியையும், அழகால் திருமகளையும் அடிமைகொள்ளும் போதிக்கும் வாய்ந்தவர்களாக விளங்கினுல் நாடு யாவராலும் நாட விளக்கும். வஞ்சனை உலோபம் மறம் ஆதியன மக்கள் கருதவுங்கூடாதவை. அவைகளின் கூத்துத் தாணிக்காலம். குடியைக் கெடுத்தது குடியே. மகாத்துமா ஜியை நினையுங்கள். மக்களில் இரக்கம் என்ற உயர் பண்பு இன்ருனல், அவ்வுருவம் மாக்களுருவென்பர். சென்ற சென்ற இடமெல்லாம் தன்னலம் நாடிய தலைவர்கள் தோன்றுகின்றனர். மேடும் பள்ளமும் போல் உலகமக்களும் வலியவர், தாழ்ந்தவர், கற்றவர், கல்லாதவர், செல்வர், வறியவர், என்ற பாகுபாடுகளைச் சித்திரமாக நாம் பார்க்கலாம்; எவ்வளவு ஆற்றலுள்ளவர்களுக்கும் பிறருதவி வேண்டும். கற்றும் உதவிஇது என்ருராயது கல்லாயிருப்பவரும் இருப்பர். 'உலகத்தோடொட்ட ஒழுகல் பலகற்றும் கல்லா ரறிவிலார்' என்றது இருமாந்திருக்கும் இப்பெரியார் பொருட்டுப்போலும்! முக்கால் மூன்று நாழிகை சம்பிரமமாக எண்ணுவது மாண்டு போகின்றதல்லவா? "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்பது பிழையாகுமா? "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவங்களே" வழித்துணை. அதற்காகப் பிறருக்கு உதவி செய்து அன்பு நீர்ப்பாய்ச்சி அறிவுப் பயிர் வளர்த்து உயிர் உய்யப்பாடுபடவேண்டும். ஆயம் அரைநாழி — அதிகாரம் முக்கால்நாழி — கோயிலின் மணியமென்று கூப்பிட்டால் வருவதைச் சிந்தியுங்கள்! ஆகவே, தேகபோஷணை வேண்டாம். ஒரு தொழிலும் பார்க்கவேண்டாம் என்பது கருத்தன்று.

"செருக லுளதென்றுவ
னின்றில்லை என்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு"

என்பதை நன்கு ஆராயவேண்டும். வாய் வேதாந்தம் பயன்படாது. இறைவனை அடையச் சுவரைவைத்துச் சித்திரம் வரைவதுபோல உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பது கைப்பிடியாக இருப்பது நன்றுதான். சத்தியும் முழு முதன்மையுமுள்ள உலகருள் காரணரும் பலருதவி நாடவேண்டியிருக்கிறது. முதற்காரணமாகச் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயை என்பனவும், துணைக் காரணமாகச் சிவசத்தியும் நிமித்தகாரணமாகச் சிவமாகிய தாமும் அமைதலை அடியார்கள் நன்கறிவர்.

"சத்திதான் பலவோ என்னில்
தடையிலா ஞானமாகும்"

என்ருர் பெரியோர். இவை உண்மை நூற் கருத்தாகும்.

தமிழ்ப் பண்டிதர்
வ. மு. இரத்தினேஸ்வரையர்

சிவபரம் பொருளைப்போல உபகாரிகள் இலர். மஹோபகாரச் செயல் திருவருட்செயல் இறைவனுடைய மகா கருணையை விளக்க முன்னிற்கின்றன. மக்களும் ஒருவருக்கொருவர் அன்புவைத்து உதவியாளர்களாகவே இருப்பது புதுமையன்று. ஒரு புறவுக்குத் தனது தேகத்தை ஒரு அரசன் கொடுத்தான். இது பயித்தியமா? உடலைக் கொடுக்க வேண்டாம். பிராணனைப் போக்கவேண்டாம். சித்த இரக்கம்வேண்டுமல்லவா? ஆ! ஒரு கண்ணின் கருணை தானென்னே!

'அன்பிற்கு முண்டோ
அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

இல்லை. ஒரு உறுப்புக்கு வலி தோன்றினுல் கண்தானே நீர் சொரியும். பொருளொடும் போகான் போற்றவும் போகான். கந்த நாஸ்திகனும் கண் பிதுங்க வாய்குழற உயிரை வவ்வும் ஒருவனுளன். இதனை நாடி நமது அரிய மனிதப் பிறவி பயனடைய ஒருவர்க்கொருவர் அன்புள்ளவர்களாய் உதவியாளர்களாய், வன்கண்மை, பெருமை முதலிய குப்பைகளை இருள்களைக் களைந்து காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக — நேயமே நெய்யும் பாலா இறைவனைப் போற்றி ஏத்தி இனிய வாழ்வு பெறுவீர்களாக. நமது உயிரினும் இனியவர் விமலசிவ பரம்பொருளே.

'என்னிலாரு மெனக்கினி யாரிலை
என்னி லும்மினி யாளொரு வன்
னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்புறம்
போந்துபுக்
கென்னுளே நிற்கு மின்னம்ப
ரீசனே'

# ஆங்கிலப் புலவர் இல்லம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தற்கு எவ்வளவு பணம் செலவு செய்யவேண்டும் என்ற விஷயம் நீண்டநேரம் வாதாடப்பட்டது. தொழிலாளர் கட்சியினர் இவ்வீடுகளை மாட்டுக்கொட்டில்கள் போல் வைத்திருக்கக்கூடாது என்று வாதாடினூர்கள். எதிர்க்கட்சியினர் இவ்வீடுகளை அரண்மனைகளாக்க நகரசபையிடம் போதிய பணம் இல்லை என்று கூச்சல் இட்டார்கள். இதன பின் ஒரு விளையாட்டு முன்றிலுக்கு ஒரு பெரிய படாம்வீடு கட்டுவதா அல்லது மூன்று சிறிய கூடாரங்கள் செய்வதா என்ற விவாதம் நிகழ்ந்தது. அங்கத்தினர் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசும்போது மேயர் தம்மைப் பார்த்துப் பேச்சை நிகழ்த்தவேண்டும் என்று ஞாபகப்படுத்துவார். இவற்றை எல்லாம் ஒன்றும் பேசாமல் ஆறுதலாக இருந்து பார்த்ததற்காக மேயரும் அங்கத்தினரும் தேநீர் அருந்தும்போது என்னையும் கவனித்துக்கொண்டார்கள். யாழ்ப்பாணத்து நகரசபை விஷயங்களை நான் அவர்களுக்குச் சொல்லவில்லை.

## விவசாயக் கல்லூரி

அடுத்தநாட்காலை 7-11-50 புறாம்ஸ் குறோஸ் என்ற இடத்தில் உள்ள விவசாயக் கல்லூரியையும் கமத்தையும் பார்த்தேன். இங்கே 25 மாணவர்கள் விடுதியிட்டுப் படிக்கின்றூர்கள். இனிய சொக்களேற் செய்யும் "கட்பெறிஸ்" கொம்பனியார் இக்கல்லூரியை 1925-ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார்கள். இன்று விவசாயப்பகுதியார்பள்ளிக்கூடச் செலவில் மூன்றில்இரண்டு பகுதியைக் கொடுக்கின்றூர்கள். மிகுதி ஸ்தாபகர்கள் உதவுகின்றூர்கள். பள்ளிக்கூடக் கமத்தில் பலசாதிப் பசுக்கள் வளர்க்கப்படுகின்றன. நான் ஒன்றிற்கு முப்பது போத்தல் பால் கொடுக்கும் பிறீசியன் (ஒல்லாந்து) தேசப் பசுக்கள் இங்கே சிலவிருக்கின்றன. எமது நாட்டில் உள்ள கறுப்பியும் சிவப்பியும் எவ்வளவு பால் தருகின்றன! நல்ல சாதிப் பசுக்களை விருத்தியாக்குவதற்காக விசேஷமான காளை மாடுகளை இங்கே வளர்க்கின்றூர்கள். இவைகளின் பீசத்தை எடுத்து செயற்கை முறையில் பசுமாடுகளுக்கு உட் செலுத்துகின்றூர்கள். பசுக்கள் நல்ல கன்றுகளை ஈன்று நிரம்பிய பால் கொடுக்கின்றனவாம்.

## ஆங்கிலக் கவிவாணர்

புறாம்ஸ் குறோவில் இருந்து இருபது கல் தூரத்தில் ஆங்கிலப் புலவர் சிகாமணி ஷேக்ஸ்பியர் பிறந்த "ஸ்ராட் வெட் ஒன் ஏவன்" என்ற இடம் இருக்கின்றது. இந்த இடத்திற்கு விவாசாயக் கல்லூரியின் பிரதம ஆசிரியர் திரு. றிக் அவர்கள் என்னை அழைத்துச் சென்றூர். ஷேக்ஸ்பியர் பிறந்த இடமும் அவர் இருந்து வாழ்ந்து பல நாடகங்கள் எழுதிய இல்லமும் இன்று அரசினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர் வாழ்ந்த இல்லத்தில் அவர் உபயோகித்த மேசை நாற்காலி முதலியனவும் அவர் எழுதிய நாடகங்கள் காகிதங்கள் முதலியனவும் பொன்னே போற் போற்றப்பட்டு வைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த இடத்திற்கு அருகாமையில் "ஏவன்" நதிக்கரையில் ஷேக்ஸ்பியர் ஞாபகநிலையம் ஒன்று கட்டப் பெற்றிருக்கின்றது. இங்கே புலவர் அவர்கள் எழுதிய நாடகங்களைத் திறமை வாய்ந்த நடிகர்களை அழைத்துக் காலத்துக்குக் காலம் நடிக்கின்றனர். ஷேக்ஸ்பியரின் இல்லத்தில் இருந்து ஒரு மைல் தூரத்தில் அவரது மனைவியாராகிய அன்ஹதவே அவர்களினது பழைய வீடு இன்னும் பாதுகாத்து வைக்கப் பெற்றிருக்கின்றது. இவ்வில்லம் முன்போலவே இன்னும் ஒருவித வைக்கோலினுல் வேயப் பெற்றிருக்கிறது. இங்கேயும் புலவர் அவர்களின் குடும்பத்தார் உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் சில தேகளிக்க வைக்கப் பெற்றி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாணத்தின் முன்னேற்றம்

## பிரதிநிதி நல்லையாவின் குறிக்கோள்

உலக சுகாதார ஸ்தாபன மகாநாட்டுக்கு இலங்கை மக்களின் பிரதிநிதியாக ஜெனிவா நகருக்கு விஜயஞ் செய்த உதவிச் சுகாதார மந்திரி வி. நல்லையா அவர்கள் (கற்குடாப் பிரதிநிதி) சமீபத்திற்றான் ஊர் திரும்பினூர். மட்டக்களப்பு நகரிலும் அங்குள்ள ஏனைய பகுதிகளிலுமுள்ள மக்கள் திரு. நல்லையா அவர்களை வரவேற்று உபசரித்துவருகின்றனர்.

அக்கரைப்பற்றில் இம்மாதம் முற்பகுதியில்நடைபெற்ற உபசாரக் கூட்டத்தின் வரலாறு இது:

அக்கரைப்பற்றுக் கணேசாநந்த சபையாரும், ஆசிரியர்களும் அக்கரைப்பற்றுச் சந்தைக்கணித்தாக திரு. நல்லையா அவர்களை மாலை சூட்டி வரவேற்று, முதலியார் எம். எம். இபுருஹிம் எம். பி. அவர்களுடன ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழிநெடுகிலும் மாலை சூட்டி மக்கள் தங்களன்பைத் தெரிவித்தனர். மாலை 5 மணிக்கே விபுலாநந்த மணிமண்டபம் மக்களால் நிரம்பியிருந்தது.

கூட்டத்துக்கு முதலியார் எம். எம். இபுருஹிம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தமது தலைமையுரையில் திரு. நல்லையா அவர்கள் தமது அரசியற் குருவென்றும் தாம் அவருடன் யோசித்தே சகல விடயமும் செய்வதெனறும், அன்னூரின் சேவை கற்குடாத் தொகுதிக்கு மாத்திரமன்று சிறப்பாக மட்டக்களப்பு முழுவதுக்கும் உரியதென்றும் குறிப்பிட்டார்கள்.

திரு. வி. நல்லையா அவர்களுக்கு திரு. எஸ். நல்லதம்பி ஆசிரியர் அவர்கள் வரவேற்புபசாரப்பத்திரம் படித்து வழங்கினூர். கணேசாநந்த சபைத் தலைவர் எஸ். மாணிக்கப்போடி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினூர்.

திரு. நல்லையா அவர்கள் உபசாரத்துக்கு நன்றி கூறுமுகத்தால் நிகழ்த்திய விரிவுரையின் சாரம் வருமாறு:

கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளைக் குறைகூறும் அரசியல் தலைவர்கள் முதலில் மட்டக்களப்புச் சரித்திரத்தை நன்கு பயிலவேண்டும். புல்மோட்டை தொடங்கிப் பாணமை வரையுமுள்ள கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஒரு கிராமம் முஸ்லீம் கிராமமாகவும்,ஒருகிராமம் தமிழ்க்கிராமமாகவுமேயிருக்கும். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று இங்கு கூற முடியாது. இந்த மணி மண்டபத்துள் கூறலாம். ஆனுல் அதை வெளியிற் கூறினுல உயிருக்கே ஆபத்துத்தான். இங்குள்ள முஸ்லீம்களும் தமிழர்களும் பிரிந்து வாழமுடியாது. ஒற்றுமையாக வாழவேண்டும். இருசாகியத்தாரும் சேர்ந்துதான் கிழக்கு மாகாண முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும். அப்போதுதான் நாமும் மற்ற மாகாணங்களுடன் சரிசமனுக இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகாவது நல்வாழ்வு வாழலாம.

இப்பகுதியைப் பொறுத்தவரையில் பாடசாலைகள், வைத்தியசாலைகள், தெருக்கள் போதா. அந்தவகையில ஆட்சி செய்யும் கட்சியுடன் சேர்ந்து இம்மக்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் என் முதல் நோக்கம். என்னுயிருக்குக்கூட உலை வைக்க நினைத்த தமிழ்க் காங்கிரசும அதன் தலைவரும் இன்று எங்கள் கட்சியில் முன்னணியில் நிற்கிறூர்கள். அதற்காக யான் சந்தோஷப்படுகிறேன். தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசின் கொள்கையையே வேறு விதமாகப் பிரசாரஞ் செய்கிறது. அவர்கள் பிரசாரத்தால்தான் இன்று இந்தியர்களுக்கு இவ்வளவு நெருக்கடி வந்திருக்கின்றது. கடைசியாக முதலில் நம்மாகாணத்தைக் கல்வி சுகாதாரம், பொருளாதாரம் சம்பந்தமாக முன்னேற்றுவோம். பிறகு அரசியற் கட்சியைப்பற்றி ஆலோசிப்போம. இம்மாகாணப் பிரதிநிதிகள் அநேகமாக அரசாங்கத்தை நடாத்தும கட்சியுடன் ஒத்துழைப்பது இந்த நல்ல நோக்கத்தைக் கொண்டுதான் என்பதை அனைவருக்கும் தெரிவிக்கின்றேன்.

திரு. க. நடராஜன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினூர்

இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியிற் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டு கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்கும் தொகை 5,000 ரூபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ரூபாவுக்குக் கூடியும் 10,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ரூபாவுக்குக் கூடியும் 50,000 ரூபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும்; 50,000 ரூபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேஜர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 91, ஹோட்டன்பிளேஸ், கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[4313]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் புலவர் இல்லம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கின்றன. எமது தமிழ்ப் புலவர்களது இல்லங்களும் அவர்கள் உபயோகித்த தளபாடங்களும் இன்று எங்கே? எமது புலவர்களின் ஏடுகளைத் "தொட்டாலும் கை மணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும், தூய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் வளர்ந்திடும்" என்று பேச்சளவில் கூறி நாம் வாளாவிருப்பது எவ்வளவு மடமை.

### மேயர் பவனி

லண்டன் மாநகரை விட்டு 15 நாட்கள் வரையில் ஸ்கொற்லாந்து தேசத்திலும் அயர்லாந்து தேசத்திலும் சுற்றுப் பிரயாணம் செய்த பின் மீண்டும் 8-11-50 காலை லண்டனுக்குத் திரும்பினேன். பிரிட்டிஷ் சங்கத்தின் விருந்தினரை உபசரிக்கும் பகுதியின் தலைவர் திரு. பீவன் என்னைச் சந்தித்துத் தன்னுடன் தேநீர் அருந்தும்படி வீட்டுக்கு அழைத்தார். நான் பார்த்த இடங்களை விசாரித்தபின் இனிமேல் பார்க்க வேண்டிய இடங்களைக் குறிப்பிட்டார். அடுத்தநாள் (9-11-50) லண்டன் மாநகரில் ஒரு பெரிய வைபவம் நடக்கப் போவதெனக் கூறினார். அது யாதெனில் ஒவ்வொரு வருஷமும் நவம்பர் மாதம் ஒன்பதாம்தேதியில் நிகழும் 'லோட் மேயருடைய பவனி.' இதை நான் பார்ப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அதிகாலையில் ஆங்கிலச் சங்கத்திற்குச் சென்றேன். அங்கே பல தேசங்களிலும் இருந்து வந்த சங்கத்தின் விருந்தினர் குழுமியிருந்தனர். சீனம், யப்பான் ஆபிரிக்கா, பிரான்சு, அமெரிக்கா முதலாம் தேசங்களிலிருந்து வந்த பிரமுகர்களைச் சந்தித்தேன். எல்லாரும் ஆங்கிலச் சங்கத்தாரின் கார்களில் ஏறி உலகப் பிரசித்தி பெற்ற அர்ச். போல்ஸ் கோவிலுக்குச் சென்றோம். இங்கிருந்து மேயரின் பவனியைக் காணபது இலகு. பவனி அதே மார்க்கமாக வரும் என்றும அவ்விடத்திற்கு வந்துசேர ஒரு மணிநேரம் செல்லும் என்றும் அறிந்தவுடன் ஆங்கிலச் சங்கத்தினர் எம்மை அர்ச். போல்ஸ் கோவிலுக்குள் அழைத்துச் சென்று அங்கே உள்ளவற்றைக் காண்பித்தார்கள்.

இக் கோவிலின் பிரதானமான மண்டபம் 513 அடி நீளமும் 402 அடி அகலமும் உடையது. இவ் வாலயத்தின் நில அறை (Basement) இதைவிட நான்கு மடங்கு பெரியது. இந்த நில அறையில் இக் கோயிலைக் கட்டிய சேர் கிறிஸ்ரோபர் ரென் முதலியோரது நூற்றுக்கணக்கான சமாதிகள் வைக்கப் பெற்றிருக்கின்றன. இங்கே 1852-ம் ஆண்டு இறந்த வெலிங்ரன் பிரபுவின் பெரியசமாதி இருக்கின்றது. வெலிங்ரன் இறந்தபோது அவரது கடைசி யாத்திரையை 20 தொன் நிறையுள்ள வெண்கல இரதத்தில் ஊர்வலமாகச் செய்தார்கள். அதே இரதம் இன்றும் இக் கோவிலின் நில அறையில் வைக்கப்பெற்றிருக்கின்றது. இவற்றைப் பார்த்தபின் ஆலயத்திலுள்ள இரகசியக்குரல் கேட்கும் சுற்றுச் சாலைக்குச் சென்றோம். 258 படிகள் ஏறிச் சென்றால் ஒரு வட்டமான சுற்றுச் சாலையைச் சேரலாம். இதன் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கம் முன்பின் 100 அடி இருக்கும. ஆனால் கட்டிட அமைப்பின் விசேடத்தினால் ஒரு பக்கத்தில் இருந்து ஒருவர் இரகசியமாகச் சுவரைப் பார்த்துப் பேசினால் அவரின் ஒலி சுவர் மூலமாக வந்து மறுபக்கத்தில் அவதானமாக இருப்பவருக்குக் கேட்கும்.

(தொடரும்)

**இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.**


சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா :

இலங்கை-இந்தியா ரூ. 6-00

மலாயா — $ 6-00

தனிப்பிரதி சதம் 10. காசு 10

The EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

Vol. 21 | Chunnakam, Sunday, June, 24, 1951 | No. 46


## திபேத் உடன்படிக்கை

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

திற்குள் இருக்கும். இராணுவச்சபை இடம்பெற திபேத் துக்காரர்கள் சீனத்தின் அனுகிரகம் பெற்று இருக்கவேண்டும். இந்த வாசகங்கள் இராணுவ சர்வாதிகாரத்தைச் சீனத்துக்கு அளித்துஇருப்பதைத் தெரியப்படுத்துகிறது. பேச்சளவில் சுதந்திரமும், செய்கையில் அடிமைத்தனமும் கொண்ட ஒரு ஒப்பந்தத்தைத் திபேத் அங்கீகரிக்கவேண்டியதாயிற்று. ருஷியாவும், சீனம் கூறும் சர்வதேச சுதந்திரமும் இதுதான் போலும்.

### ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் விஷயமும் கவனிக்கப்படவேண்டும். இந்தியாவின் எல்லையோரத்தில் என்றேஒருநாள் சீன இராணுவம் நிறுத்தப்பட்டால், அதைக்கண்டு ஆச்சரியப்படவேண்டியதில்லை. கொம்யூனிஸ்ட் ஆட்சியில் இருக்கும் சீன இராணுவம் இந்தியாவின் எல்லையில இருப்பது இந்தியாவிற்கு என்றும் ஆபத்தானதுதான். இப்பொழுதுள்ள முறையில் இந்தியாவானது ருஷியா, சீனம் ஆகிய இருநாடுகளுடன் பகைமை கொள்ளவில்லையென்றாலும், எல்லைப்பாதுகாப்பை இந்தியா கவனித்துச் சீர் செய்யவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. எப்படியும், மொஸ்கோவிற்கு ஒரு வெற்றி கிடைத்துவிட்டது. திபேத்தின் சுதந்திரம் மறைமுகமாகப் பறிக்கப்பட்டுவிட்டது. சீனத்தின் அடுத்த நோக்கம் எந்தத் தேசத்தின்மீது என்பது போகப் போகத் தெரியும்.

## வாழ்க்கைச் செலவு

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கும். உணவுச் செலவு பாதியாயிற்று.

இரண்டாவதாக உடை. புடைவைகளின் விலை இரண்டு மூன்று மடங்காக உயர்ந்திருப்பது கண்கூடு. எவ்வளவு பணத்தைக் கொட்டி வாங்கினாலும் ஒரு வெள்ளைக்குப் போய்வரக் கந்தலாகிவிடும். யாரோ ஒருவரின் புடைவை தானே என்றுபோலும் சலவைத் தொழிலாளி அவ்வளவு கவனமெடுப்பதில்லை. ஆகவே, யோசனை செய்து சலவைத் தொழிலாளியிடம் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தோம். உடுபுடவை விநியோகம் செய்தல் அவன் கடமை. ஒவ்வொரு முறைக்கும் சிறிய பணம் கொடுப்பதுதான் எங்கள் கடமை. இந்தக் கொடுக்கல் வாங்கத் திட்டம் காரணமாக எங்களுக்கு விதம்விதமான புடவைகள் கிடைத்து வந்தன. கந்தைகளைக் கட்டி அவமானப்படவேண்டியதில்லை. உடைச் செலவும் பாதிக்குமேல் குறைந்தது.

இனி, பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள் வாங்குவதில்லை. ஒரு நாளைக்கு ஒவ்வொரிடத்தில் இரவல் எடுத்துப் பிள்ளைகள் படித்தார்கள். புத்தகம் இல்லாமற் படித்ததோ என்னவோ புத்தகம் இருக்கே என்ற அசண்டையில்லாமல் விஷயங்களைக் கிரகிக்க நன்று பயின்று கொண்டார்கள். இதனாற் பாடப்புத்தகச் செலவு மிஞ்சியது.

தேசியக்கடனாலும் எங்களுக்குச் சகாயம் கிடைத்தது. இக்கடனுக்குச் சேமிப்புப் பத்திரமோ கடன் சிட்டைகளோ இல்லை. கர்ணபூஷணம் தரிக்கவுமில்லை. நண்பர்களிடம் ஒரு ரூபாய் கடன்பெற்று வாங்கிக்கொண்டேன். அது மிகச் சிறிய தொகை யாதலால் நண்பர்கள் ஒருவரும் திருப்பிக் கேட்பதில்லை. நானும் அவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டுமே யென்று ஆடு திருடினவன் போல் விழிக்கமாட்டேன். அதைப் பற்றி அவ்வளவு அசண்டையாக இருப்பேன். நண்பர்களைக் கண்டவுடன் கடன் கேட்கும் என்னிடம் யாரும் கடன்கேட்கத் துணியவும் மாட்டார்கள்.

மற்றும் கோவில் குளம் பார்க்கக் குடும்பமாகப் புறப்பட நேரில் என் மனைவியைப் பார்க்க வேண்டுமே. இரவற் புடைவையிலே இது நல்ல கொய்யகம் தான் என்ற பிரகாரம் இரவல் நகைகளிடையே அவள் நின்று 'டால்' வீசுவாள். ஆகவே நகை செய்யும் செலவும் மிஞ்சியது. இது யாருக்கும் ஆச்சரியம் விளைக்காதல்லவா?


## சரசாலை மத்திய சமூக சேவா சங்கம்

### விசேஷ பொதுக்கூட்டம்

இக்கூட்டம் 16-6-51 சனிக்கிழமை பிற்பகல் சபைத் தலைவர். திரு ச. தியாகராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வழக்கறிஞர் கதிர்காமசேகரர் அவர்கள் 'சமூக முன்னேற்றம்' என்னும் பொருள் பற்றியும், முதலியார் திரு. செ. சின்னத்தம்பி அவர்கள் 'திருக்குறளும் தமிழர் வாழ்க்கையும்' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.


## எங்களுடைய கங்காணி எங்களை கைவிட்டுக் கொண்டிருந்தான்— ஆனால் நாங்கள் இப்பொழுது அவனைப்பற்றி பெருமிதமடைகிறோம்!




### ஹார்லிக்ஸ் எவ்வாறு உங்களை போஷணைக் குறைவிலிருந்து பாதுகாக்கும்

நீங்கள் உட்கொள்ளும் உணவில் தேகாரோக்கியத்திற்கும் வலிமைக்கும் அவசியமான சில போஷணைச் சத்துக்கள் அடங்கியிராமல் இருக்கலாம். நீங்கள் எவ்வளவு உணவு சாப்பிடுகிறீர்கள் என்பதைவிட எவ்விதமான உணவு சாப்பிடுகிறீர்கள் என்பதே முக்கியம். நீங்கள் முழு உணவுசாப்பிட்டும் போஷணைக் குன்றியிருக்கலாம். உங்களுடைய தினசரி உணவுடன் 100க்கு 100 போஷணையுள்ள ஹார்லிக்ஸை சேர்த்துக் கொள்ளுங்கள். ஹார்லிக்ஸ் முழு ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பாலோடு, போஷாக்குச் சத்துமிகுந்த கோதுமை, பக்குவப் படுத்தப்பட்ட பார்லி முதலியவை சேர்த்து தயாரிக்கப் படுகிறது.

½ ராத்தல், 1 ராத்தல், 5 ராத்தல் பாட்டில்களில் கிடைக்கும்

**ஹார்லிக்ஸ்**

கூடுதல் போஷணைக்கு

நீங்கள் ஹார்லிக்ஸ் வில்லைகளை சாப்பிட்டுப் பார்த்திருக்கிறீர்களா? அவை மிகவும் ருசியானவை.

85 சதங்கள் தான்!

HLC. 260


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு ஜூன் மீ 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.